வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 50/-






# ஈழநாடு

Eelanadu வார மலர்
Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    05.07.2026 ஞாயிற்றுக்கிழமை    இதழ் : 180    பக்கங்கள் : 16

## உதயநிதி ஸ்டாலினை சந்தித்து பேசியது தமிழ் தேசிய பேரவை!

சென்னை, ஜூலை. 05

தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கும், தமிழ் தேசிய பேரவையின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், ஜனநாயகத் தமிழர் கட்சித் தலைவர் கே.வி. தவராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப் பாளர் தருமலிங்கம் சுரேஷ்,

15




# பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை உடனே நிறுத்துக!

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கோரிக்கை

ஜெனீவா, ஜூலை. 05

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள அரசினைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்ட மூலம், தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்குப் பதிலாக அவற்றை மேலும் விரிவுபடுத்துவதுடன் புதிய அபாயங்களையும் தோற்றுவிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கவலை தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்குகு அனுப்பியுள்ள கருத்துப் படிவத்தில், இந்த வரைவில் உள்ள தெளிவற்ற மற்றும் பரந்த வரையறைகள் காரணமாக அளவுக்கு அதிகமான குற்றமயமாக்கல் ஏற்படும் என ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

15

## இலங்கையின் வேலையின்மை விகிதம் 3.7 வீதமாகக் குறைவு!

கொழும்பு, ஜூலை. 05

இலங்கையின் வேலையின்மை விகிதம் 2026 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 3.7 வீதமாகச் சற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய தொழிலாளர் சக்தி கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டின் இதே காலாண்டில் இந்த விகிதம் 3.8 வீதமாகக் காணப்பட்டது. அதே வேளை, நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாளர் பங்களிப்பு விகிதம் கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 49.7 வீதத்திலிருந்து

15

## மேலதிக கட்டண விதிப்பால் வாகன இறக்குமதி குறைவு!

கொழும்பு, ஜூலை. 05

வாகன இறக்குமதிக்கான மேலதிக கட்டணம் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டிற்குள் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் அளவில் தெளிவான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இறக்குமதி நடவடிக்கைகள் உச்சத்தில் இருந்த காலப் பகுதியில், நாளொன்றுக்கு சராசரியாக 400 முதல் 450 வரையான இறக்குமதிப் பதிவுகள் பதியப்பட்டு வந்ததுடன், சில தினங்களில் அது 800 வரை உயர்ந்திருந்தது.

15

## இலங்கைத் தமிழருக்கு நீதி கிடைக்க சர்வதேச ரீதியில் குரல் கொடுப்பேன்!

### அமெரிக்காவில் அண்ணாமலை உறுதி!

நியூ ஜெர்சி, ஜூலை. 05

“போரினால் பாதிக்கப்பட்டு, புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு தகுந்த நியாயம் கிடைக்க வேண்டும்” என “வீ த லீடர்ஸ்”

15



### முதல்வர் விஜய்யை சந்தித்தார் இலங்கை துணைத் தூதுவர்

சென்னை, ஜூலை. 05

சென்னையில் உள்ள இலங்கை பிரதி தூதுவர், தமிழக முதலமைச்சர் விஜய்யை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

15

## மக்கள் கோரிக்கை விடுத்தால் மட்டுமே நாமலை வேட்பாளராக களமிறக்குவோம்!



### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 05

மக்கள் கோரிக்கை விடுத்தால் நாமல் ராஜபக்ஷவை அடுத்த கட்டத் தேர்தல்களில் வேட்பாளராகக் களமிறக்கத் தயாராகவுள்ளோம். நான் ஒருபோதும் அரசியலில் இருந்து விடைபெறப் போவதில்லை. பிரிந்து சென்றவர்களை மீண்டும் ஒன்றிணைத்து எமது கட்சி முன்னோக்கிப் பயணிக்குமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

15

## நீதித்துறையை சீரழிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசு!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை. 05

அரசியலமைப்பு திருத்தம் மூலம் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க அரசாங்கம் எடுத்து வரும் திடீர் முயற்சிகள், நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கும் ஜனநாயகத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பவுண்டேஷன் நிறுவனத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பகிரங்க கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு மேலும் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி

14

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; விஜயதாஸவிடம் விசாரணை!

கொழும்பு, ஜூலை. 05

பிரபல பாதாள உலகக் குற்றவாளிக்கு உதவ 12 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொழில்முறை குற்றவாளி ஒருவருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, அவரது மனைவியிடமிருந்து 12 கோடி ரூபாய் இலஞ்சமாக பெற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர்

14

## டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களும் ஒத்துழைக்கவேண்டும்!

### ஜனாதிபதியின் செயலாளர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 05

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதை அரசாங்கத்தினால் மாத்திரம் சாதிக்க முடியாது என்றும், இதில் பொதுமக்களுக்குப் பாரிய பொறுப்பு இருப்பதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க இதனை வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் தற்போதைய டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட

14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனவர்களுக்கு நீதி கேட்டு மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம்



மட்டக்களப்பு, ஜூலை. 05

இலங்கையில் போர் முடிவடைந்த காலகட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்தக் கோரியும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் மட்டக்களப்பில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் மற்றும் உறவினர்கள் பலர் கலந்து கொண்டு தங்களது ஆதங்கங்களையும் கோரிக்கைகளையும் பதாகைகள் மூலம் வெளிப்படுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத் தலைவி அ.அமலநாயகி தலைமையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தின் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஒரு கண் துடைப்பு நாடகம் என்றும், தங்களுக்கு சர்வதேச நீதி விசாரணையே தேவை என்றும் போராட்டக்காரர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

நீண்ட காலமாகத் தொடரும் தங்களது நீதிக்கான போராட்டத்துக்கு முறையான தீர்வு கிடைக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் இதில் தலையிட்டு தங்களுக்கு தகுந்த நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர். (அ)

# தமிழக தலைவர்களுடனான சந்திப்பு சுயலாப அரசியலின் வெளிப்பாடே!

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை. 05

தென்னிலங்கையில் ஆட்சிக்கு வருகின்ற யாருமே தங்கத் தாம்பாளத் தட்டில் வைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை தரமாட்டார்கள் என்று தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சூழலை நாமே உருவாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சிலர் தமிழகத் தலைவர்களை சந்தித்து சர்வதேச விசாரணை, சமஷ்டி என்று சுயலாப அரசியலை முன்னெடுக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே குறித்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈ.பி.டி.பி. முன்வைத்த மாற்று கொள்கைகளே நடைமுறைச் சாத்தியமானது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

மாகாணங்களை அடிப்படையாக கொண்ட அதிகார பகிர்வை வலுப்படுத்தி முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கே இந்தியாவின் அனுசரணையும் இருக்கும்.

ஆனால் தற்போது, சிலர் தமிழகத் தலைவர்களை சந்தித்து சர்வதேச விசாரணை, சமஷ்டி என்று சுயலாப அரசியலை முன்னெடுக்கின்றனர். அவை எமது மக்களுக்கு எந்த நன்மைகளையும் பெற்றுத்தராது.

மாகாண சபையில் இருந்து ஆரம்பித்து, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற இலக்கினை நோக்கி பயணிப்பதே எமது இலக்கு என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

இதனை அனைத்து தமிழ்த் தரப்பினரும் தற்போது வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான உண்மைகளும், எமது அரசியல் வேலைத் திட்டங்களும் சரியான முறையில் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படாமையும் எமது அரசியல் பின்னடைவுகளுக்கு காரணமாக அமைந்துள்ளது.

எனவே எமது அரசியல் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் சாத்தியமான அனைத்து வழிமுறைகள் ஊடாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட வேண்டும்-என்றார். (அ-05)

# ஓட்டோவில் கடத்தப்பட்ட இரண்டு மாடுகள் மீட்பு!





மன்னார், ஜூலை. 05

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் தாராபுரம் பிரதான வீதி பகுதியில் வைத்து ஓட்டோவில் சட்ட விரோதமான முறையில் கொண்டு கொண்டு செல்லப்பட்ட இரண்டு மாடுகளை மன்னார் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

குறித்த இரண்டு மாடுகளும் திருடப்பட்டு சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கு அமைவாக உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இணைந்து குறித்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட இரண்டு மாடுகளை பொலிஸார் மீட்டுள்ளதோடு குறித்த மாடுகளை ஓட்டோவில் ஏற்றி வந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் எமில் நகர் பகுதியை சேர்ந்த 34 வயதுடையவர் என்றும் மன்னாரில் பொலிஸ் கான்ஸ்டபிளாக கடமையாற்றி தற்காலிகமாக பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டவர் என்றும் தெரிய வருகிறது.

அவருக்கு உதவியவர்கள் என்ற அடிப்படையில் மேலும் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (அ)

# சஜித், ரணில், மஹிந்த அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்!

## கந்தசாமி பிரபு எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 05

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளைப் போன்றவர்கள் என்றும், அவர்களின் அரசியல் செயற்பாடுகளின் மையமாக இனவாதமே காணப்படுவதாகவும் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்த அவர், வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை மற்றும் இடவசதி உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது, கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வருமாறும் வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட கந்தசாமி பிரபு, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தல் காலங்களில் இனவாதத்துக்கு எதிரானவர்களாக தங்களை சித்தரித்தாலும், அதிகாரத்துக்கு வந்த பின்னர் அவர்களின் உண்மையான அரசியல் நிலைப்பாடுகள் வெளிப்பட்டதாக குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வை சுட்டிக்காட்டிய அவர், சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் ஒரே மேடையில் தோன்றியமை, அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனவாத அரசியலை முன்னிறுத்தவில்லை என்றும், நாட்டில் இனவாதத்தை மீண்டும் தலைதூக்க விடாத கொள்கையுடனேயே அரசாங்கம் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அனைத்து இன மக்களுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருவதாகவும், இனவாதத்தை ஊக்குவிக்கும் எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்கப் போவதில்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் கந்தசாமி பிரபு வலியுறுத்தினார். (அ)







# பாடப்புத்தக விநியோகத்தை சீராக்க புதிய தொழில்நுட்ப நடவடிக்கைகள்!

கொழும்பு, ஜூலை. 05

பாடசாலை பாடப்புத்தக கொள்முதல், களஞ்சிய முகாமை, விநியோகம் மற்றும் இருப்பு கட்டுப்பாட்டை மேம்படுத்த கல்வி அமைச்சு புதிய தொழில்நுட்ப நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய தரவு அமைப்பின் மூலம் மாணவர் எண்ணிக்கை, பாடப்புத்தக இருப்பு மற்றும் மீள்பயன்பாட்டு புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் நேரடியாகப் பெறப்படவுள்ளன.

மேலும், ஈ-தக்சலாவ இணையத்தளத்தை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் மேம்படுத்துதல் உள்ளிட்ட திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் மூலம் பாடப்புத்தக விநியோகத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறனை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக முதலீட்டு ஒத்துழைப்பை மேலும் விரிவாக்க தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 05

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் நய்யார் நசீர் ஆகியோருக்கு இடையிலான விசேட கலந்துரையாடல், கொழும்பில் உள்ள கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அமைச்சில், நேற்று இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான, வர்த்தக, முதலீட்டு மற்றும் தொழில் முனைவோர் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தொழில் முனைவோர் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக, இலங்கை மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் மற்றும் கராச்சி பிராந்தியங்களுக்கு இடையில், தொழில் முனைவோர் பரிமாற்ற வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில், இரு தரப்பும் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதன் மூலம், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு, புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகவுள்ளன.

தேசிய இரத்தின மற்றும் ஆபரண அதிகார சபையின் ஊடாக, இரத்தினக்கல் கைத்தொழிலில் தொழில்நுட்ப பரிமாற்ற வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்து தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இது, இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உற்பத்தித்துறையின் தர மேம்பாடு மற்றும் சர்வதேச சந்தை விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளப்படும் தேயிலை ஏற்றுமதி, அண்மைக் காலங்களில் குறைவடைந்துள்ள நிலையில்,

அதனை மீண்டும் அதிகரிப்பது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# வருமான இலக்கைக் கடந்தது இலங்கை சுங்க திணைக்களம்!

கொழும்பு, ஜூலை. 05

இலங்கை சுங்கத் திணைக்களம் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1373.7 பில்லியன் ரூபா வருவாயை ஈட்டியுள்ளது.

வருடத்தின் முதல் 6 மாதங்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான இலக்கை விட இது கூடுதலானது என சுங்க ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட சுங்க பணிப்பாளருமான சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

முதல் 6 மாதங்களுக்கு சுங்கத் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்கு 1,060.5 பில்லியன் ரூபாவாக இருந்த நிலையில், திணைக்களம் அந்த இலக்கைத் தாண்டி 313 பில்லியன் ரூபா மேலதிக வருவாயை ஈட்டியுள்ளது.

இவ்வருடத்துக்காக சுங்கத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த வருமான இலக்கு 2,206 பில்லியன் ரூபாவாகும். இந்நிலைமையின் கீழ், கடந்த வருடம் ஈட்டப்பட்ட சாதனை அளவிலான 2.5 ட்ரில்லியன் ரூபா ஒட்டுமொத்த வருமானத்தையும் இவ்வருடத்தில் தாண்டிச் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக ஊடகப் பேச்சாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜூலை மாதத்திற்காக சுங்கத் திணைக்களத்துக்கு விதிக்கப்பட்டுள்ள வருமான இலக்கு 192.4 பில்லியன் ரூபாவாகும் என்பதுடன், அதன் முதல் இரண்டு நாட்களில் மாத்திரம் 31 பில்லியன் ரூபா வருவாயை சுங்கத் திணைக்களம் ஈட்டியுள்ளது.

எவ்வாறாயினும், மோட்டார் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, அத்துறையிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் சற்றுக் குறைவு காணப்படுவதாக சந்தன புஞ்சிஹேவா மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# நெடுந்தீவில் குடிதண்ணீர் நெருக்கடி; தீர்வு காண உடன் நடவடிக்கை தேவை

**அரசாங்கத்திடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை**

யாழ்ப்பாணம், ஜூலை. 05

நெடுந்தீவில் வாழுகின்ற மக்கள் குடிதண்ணீரரைப் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அங்கு முன்னெடுக்கப்படும் கடல்நீரை நன்னீராக்கும் செயற்பாகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு குடிதண்ணீர் பிரச்னை முழுமையாக தீர்க்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி. அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலளார் சிறிகாந் பன்னீர்செல்வம் கருத்து தெரிவிக்கையில்-

நெடுந்தீவில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கான குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கோடு 2010ஆம் ஆண்டு காலப் பகுதியில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் ஆர்.ஓ. பிளான்ற் எனப்படும் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்மூலம் தற்போது நாளாந்தம் 80,000 லீற்றருக்கும் அதிகமான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் பெறப்பட்டு அது 900 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டும் வருவதாக கூறப்படுகின்றது.

இருந்தபோதிலும், நெடுந்தீவில் தற்போது மக்கள் தொகை அதிகரித்துள்ள் நிலையில், 1400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், வாழ்ந்து வருகின்ற நிலையில், அதனுடன் இணைந்த அரச திணைக்களங்கள் பாடசாலைகள் ஆலயங்கள் என பல பொது தேவைகளுக்காகவும் தற்போதுள்ள கடல்நீரை குடிதண்ணீராக்கும் திட்டத்தின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

எனவே, குறித்த விடயத்தில் தற்போதைய அரசாங்கம் அவதானம் செலுத்தி மக்களின் வாழ்வியலுக்கு அவசியமான குடிதண்ணீர் தாராளமாக கிடைப்பதற்கான நடடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்-என்றார். (அ)

## மன்னார் மாவட்டத்தில் இதுவரை 47 டெங்கு நோயாளர் அடையாளம்

மன்னார், ஜூலை. 05

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 47 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.எச்.எம்.அஸாத் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

## கடற்படையால் 27 பேர் கைது!

கொழும்பு, ஜூலை. 05

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளில் 27 பேர் கைது செய்யப்பட்டதுடன் 12 மீன்பிடி படகுகளும் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படை வெளியிட்டுள்ள தகவலின்படி, நடப்பாண்டில் ஜூன் 16 முதல் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், நாட்டின் கடல் எல்லையை உள்ளடக்கிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் நடவடிக்கைகளின் போது 10 டிங்கி படகுகள், 2 கேனோ படகுகள், வணிக வெடிபொருள்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலை சூடைகுடா, ஸ்விட் பே, யாழ்ப்பாணம் உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சிலாவத்துறை சாவாரிபுரம் கடற்கரை உள்ளிட்ட கிழக்கு, வடக்கு மற்றும் வடமேற்கு கடற்படை கட்டளைப் பகுதிகளில் இந்த விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட பொருள்கள் மற்றும் மீன்பிடி படகுகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை, மூதூர், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள அலுவலகங்களுக்கும், மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (அ)




## பிரதமரை சந்தித்தார் சுவிற்சர்லாந்து தூதர்

கொழும்பு, ஜூலை. 05

இலங்கைக்கான தமது பதவிக் காலத்தை நிறைவு செய்யும் சுவிட்சர்லாந்து தூதுவர், சிறி வோல்ட் (03) அலரி மாளிகையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தார்.

தூதுவரை வரவேற்ற பிரதமர், இலங்கை மற்றும் சுவிட்சர்லாந்து இரு நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவையும் ஒத்துழைப்பையும் பலப்படுத்துவதற்காக, அவர் தனது பதவிக்காலத்தில் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்து, விசேடமாக தொழிநுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறை தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், கைத்தொழில் துறையில் நிலவும் தொழிலாளர் சந்தை தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இளைஞர், யுவதிகளின் திறன்களை மேம்படுத்தக்கூடிய தொழிற்பயிற்சி வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்வது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

கைத்தொழில்துறையின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கல்வியை பலப்படுத்துவதன் மூலம், உழைக்கும் சக்தியின் திறன்களை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மற்றும் இலங்கையின் நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் முக்கியமான பங்களிப்பை வழங்க முடியும் என தூதுவர் இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் சுவிற்சர்லாந்துக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தி, இருதரப்பு நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இரு தரப்பினரும் தமது கவனத்தைச் செலுத்தினர்.

இந்நிகழ்வில் சுவிற்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான முதன்மைச் செயலாளர், குடியேற்ற விவகாரங்களுக்கான முதன்மைச் செயலாளர், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## காட்டு யானை தாக்கியதில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை. 05

சூரியபுர, ஜனசவிவெவ பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 45 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

வான்எல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மற்றொருவருடன் வயல்வெளிக்குச் சென்றிருந்தபோது, திடீரென காட்டு யானை தாக்கியதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் சூரியபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொழும்பில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தை கடந்தது!

## உயிரிழப்பு 39 ஆக உயர்ந்தது

கொழும்பு, ஜூலை. 05

கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தைத் தாண்டி, 12 ஆயிரத்து 17 ஆக உயர்ந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரை 58 ஆயிரத்து 810 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று காலையுடன் கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 2 ஆயிரத்து 604 புதிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், ஜூலை மாதத்தின் முதல் மூன்று நாள்களில் மட் டும் 3 ஆயிரத்து 422 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜூன் மாதத்திலேயே அதிக பட்சமாக 21 ஆயிரத்து 547 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதாரத் தரவுகள் தெரிவிக்கின்றன.

மாகாண ரீதியாக, மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான பாதிப்பு பதிவாகியுள்ளது. அங்கு 30 ஆயிரத்து 876 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்ட ரீதியாக, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. கம்பஹா மாவட்டத்தில் 11 ஆயிரத்து 740 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போது நாடு முழுவதும் 142 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக அவதானப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை உடனடியாக அகற்றி, சுற்றுப்புறத்தை சுத்தமாகப் பேணுவதன் மூலம் நோய் பரவலைக் கட்டுப்படுத்த பொது மக்கள் ஒத்துழைக்குமாறு சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

# தேசிய மகளிர் ஆணைக்குழுவுடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை. 05

இலங்கை சுயாதீன தேசிய மகளிர் ஆணைக்குழுவின் தலைவி உள்ளிட்ட ஆணையாளர்களுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கப் பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து, இந்தத் தூதுக் குழுவினர் பிரதமருக்கு விளக்கமளித்தனர்.

பெண்களின் உரிமைகளை மேம்படுத்தல், பாதுகாத்தல், முன்னோக்கி எடுத்துச் செல்லுதல் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான தேசிய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்காக, இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது சுயாதீன சட்டரீதியான நிறுவனமாக, இந்த தேசிய மகளிர் ஆணைக்குழு காணப்படுகின்றது என்பதை, அதன் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இங்கு கருத்து வெளியிட்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய, ஆணைக்குழு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பாராட்டியதுடன், பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் என்பன தொடர்பில், ஆணைக்குழு முன்னின்று செயற்படுவதற்கும், பாராட்டுத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், இலங்கை சுயாதீன தேசிய மகளிர் ஆணைக்குழுவின் தலைவி கிரேஸ் ஆசீர்வாதம், ஆணையாளர்களான ஜெயந்தி குருஉதும்பால, ஜனஹா செல்வராஜ், கலாநிதி பத்மா குணரத்ன, எம்.யு. கயானி மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.டி.ஆர்.ஒல்கா ஆகியோர் பங்கேற்றனர். (அ)

# பனிச்சங்குளத்தின் புனரமைப்பை ஆரம்பித்து வைத்தார் குகதாஸன்

திருமலை, ஜூலை. 05

திருகோணமலை- வெருகல் -பூநகர் பகுதியிலுள்ள பனிச்சங்குளத்தின் புனர்நிர்மாண வேலைகளை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாஸன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாஸனின் பன்முகப்படுத்தப்பட்ட 1.5 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் பனிச்சங்குளம் புனர்நிமாணம் செய்யப்படவுள்ள நிலையில் ஆரம்ப நிகழ்வு மத அனுஷ்டானங்களுடன் நடைபெற்றது.

நிகழ்வில் வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் சேதுராமன் கருணாநிதி, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், வெருகல் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் குமார் சாந்தகுமார் ,வெருகல் பிரதேச சபை உறுப்பினர்கள், விவசாய சங்கத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# பலத்த காற்று வீசக்கூடும்!

கொழும்பு, ஜூலை. 05

நாட்டில் தீவிரமடைந்துள்ள தென் மேற்கு பருவக்காற்று நிலைமை காரணமாக, நாட்டின் பல மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் பலத்த காற்று வீசக்கூடும் என, வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை நிலை நேற்று முதல் இன்று முற்பகல் 11:00 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, வட, வட மத்திய மாகாணங்களிலும், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, திருகோணமலை மாவட்டங்களிலும், அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, அப் பகுதிகளில் உள்ள மக்கள் மற்றும் வாகன சாரதிகள், கடற்றொழிலாளர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# நீதியரசர்கள் நியமனத்தை, நிறைவேற்றதிகாரம் தாமதமாக்குவது சட்டத்தின் ஆட்சிக்கு எதிரானது

## பிரேம்நாத் சி தொலவத்த குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை. 05

உயர் நீதிமன்றங்களுக்கான நீதியரசர்களின் நியமனத்தை, நிறைவேற்று அதிகாரம் தாமதப்படுத்துவதானது சட்டத்தின் ஆட்சிக்கும், நீதித்துறையின் சுதந்திரத்திற்கும் எதிரான விடயம் என உண்மையை தேடுபவர் அமைப்பின் நிறுவுனரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேல் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் போன்றவற்றின் ஆட்சேர்ப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்காகவே,

உயர் நீதிமன்ற நீதியரசர்களின் நியமனங்கள் கட்டமைப்பு சீரமைப்பு என்ற பெயரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் நியாயப்படுத்த முயன்றார்.

எனினும் ஜனாதிபதியின் இந்தத் தர்க்கம் சட்டபூர்வமாக செல்லுபடியாகாது.

அதுமாத்திரமின்றி அரசியலமைப்பு ரீதியாக பிழையானதுமாகும்.

அரசியலமைப்புக்கமைய நீதிமன்றங்களின் நிர்வாகம் மற்றும் ஆட்சேர்ப்பு, முற்றிலும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

ஆனால், உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் நியமனம் என்பது, அரசியலமைப்புச் சபையின் அனுமதியுடன், ஜனாதிபதி செய்ய வேண்டிய தனித்துவமான கடமையாகும்.

கீழ் நீதிமன்றங்களின் நிர்வாகத் தாமதங்களை, உயர் நீதிமன்ற நியமனங்களை காலம் தாழ்த்துவதற்கான காரணமாக, ஜனாதிபதி பயன்படுத்த முடியாது.

பல தசாப்தங்களாகப் பணியாற்றும் சிரேஷ்ட நீதிபதிகள் தங்களது சிரேஷ்டத்துவம் மற்றும் திறமையின் அடிப்படையில் உயர் நீதிமன்றங்களுக்குப் பதவி உயர்வு பெறுவார்கள் என்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர்.

இந்த நியமனங்களை தன்னிச்சையாக நிறுத்துவதன் மூலம், அவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத தொழில்முறைப் பாதிப்பு ஏற்படுவதுடன் நீதிமன்றங்களின் தலைமைத்துவப் பதவிகளை ஏற்கும் எதிர்கால வாய்ப்புகளும் பறிபோகின்றன.

அரசாங்கத்தின் நிர்வாகத் பலவீனங்களுக்கு, பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் சிரேஷ்ட, நீதிபதிகள் பழிவாங்கப்படக் கூடாது.

தகுதியான நீதிபதிகளைக் காலவரையறையின்றி காத்திருக்க வைப்பது, அரசியலமைப்பின் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பு என்ற உரிமையை நேரடியாக மீறுவதாகும்.

உயர் நீதிமன்றங்களில் நீதியரசர்களின் எண்ணிக்கையை குறைத்து வைத்திருப்பது, மக்களின் விரைவான நீதிக்கான உரிமையைப் பாதிக்கும்-என்றார்.

# டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டால், பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை. 05

பல்கலைக்கழகங்களுக்குள் டெங்கு நோயாளர்கள் கொத்தணிகளாக அடையாளம் காணப்பட்டால்,

சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, பல்கலைக் கழகங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது தேசிய மட்டத்தில் டெங்கு தொற்று நிலைமை காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அதேபோல், அதிக அவதானம் மிக்க பல மாவட்டங்களும் பிராந்தியங்களும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

கல்வி மற்றும் உயர் கல்வி நிறுவனங்களை, இந்த டெங்கு தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உயர் கல்வி நிறுவனங்களில் டெங்கு நோயாளர்கள் கொத்தணிகளாகப் பதிவானால், சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, அவற்றை மூட வேண்டி ஏற்படும்.

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமைக்கும் அதுவே காரணமாகும்.

அதேபோன்று, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் உரிய வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

அதற்கமைய, அதனை எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டும் திறப்பதற்கு எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

# உணவக உரிமையாளருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

யாழ்ப்பாணம், ஜூலை. 05

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா, கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம், 27 ஆம் திகதிகளில் இடம்பெற்ற போது, சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு, ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருவிழா உணவு விற்பனை நிலையங்களில், நெடுந்தீவு பொது சுகாதார பரிசோதகர் ஜெ. ஜெனற் ஜோன்சன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதவான், மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் 24 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தார். அத்துடன் குற்றச்சாட்டுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத கால சிறைத் தண்டனையும் விதித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
05.07.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், ஆனி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## எந்த இலட்சணத்தில் இந்த வேண்டுகோள்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய பேரவை தூதுக் குழுவினர் முதலில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்யை வெள்ளியன்று சந்தித்ததை தொடர்ந்து நேற்றைய தினம் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்தனர்.

முதலமைச்சர் விஜய்யிடம் ஐந்து பக்க மகஜர் ஒன்றைக் கையளித்த தூதுக் குழுவினர் அவருடன் பேசிய விடயங்கள் குறித்து உதயநிதியுடன் விரிவாக ஆராய்ந்தார்கள். அத்துடன் 2025 டிசெம்பர் 18ஆம் திகதி அன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் தாங்கள் நடத்திய சந்திப்பைத் தொடர்ந்து ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் 2026 பெப்ரவரி 11 ஆம் திகதி அவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தை அவர்கள் உதயநிதிக்கு நினைவூட்டினார்கள்.

மோடிக்கான அந்த கடிதத்தில் தந்தையார் வெளிப்படுத்திய நிலைப்பாடுகளை தனயனும் தொடர்ந்து உறுதியாக வலியுறுத்த வேண்டும் என்றும் இலங்கையில் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட தமிழ் தேசிய பேரவையினர் இதற்காக தமிழ்நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து இந்திய மத்திய அரசுக்கு நெருக்குதல்களைக் கொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்ததிருக்கிறார்கள்.

விஜய்யிடம் கேட்டுக் கொண்டதைப் போன்றே தமிழ் தேசிய பேரவை தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவரிடமும் ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்னைக்கு நிலையான தீர்வாக தமிழர்களின் தேசம் மற்றும் தனித்துவமான மக்கள் என்ற அங்கீகாரத்தின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கூட்டாட்சி கட்டமைப்பை ஏற்படுத்த இந்தியா உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை குறித்து நம்பகமானதும் சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணை நடத்தப்படுவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

இந்த பேரவை உதயநிதியிடம் பிரத்தியேகமான ஒரு கோரிக்கையையும் முன்வைத்திருக்கிறது. மாநிலத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு பிரதிநிதித்துவக் குழுவை அமைத்து அதன் ஊடாக சர்வகட்சி மகாநாடொன்றை நடத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுக்குமாறும் ஈழத் தமிழர் உரிமைப் பிரச்னையில் தமிழ்நாட்டின் சகல கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்றும் உதயநிதியிடம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது. ஆனால், தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் இது விடயத்தில் தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக ஏமாற்றத்தையே தந்திருக்கின்றன.

அண்மைக் காலமாக அரசியலமைப்பு யோசனைகளை வரையும் செயன்முறைகளைக் கூட தமிழ் அரசியல் சமுதாயம் இரு அணிகளாக பிரிந்து நின்றே முன்னெடுத்து வருகிறது.

இனப் பிரச்னைக்கான குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் சாத்தியமானளவுக்கு ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்த பின்னர் வெளிச் சக்திகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரினால் அதில் ஒரு அர்த்தமிருக்க முடியும்.

அதை விடுத்து உள்நாட்டில் ஏட்டிக்குப் போட்டியான நிலைப்பாடுகளை எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டு கட்சிகளை எமது பிரச்னை தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் மாநிலத்தில் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்ட வேண்டும் என்றும் கேட்பது எந்தளவுக்கு பொருத்தமானதும் விவேகமானதும் என்பதை தமிழ் தேசிய பேரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த இலட்சணத்தில் இந்த வேண்டுகோள்.

### தென்னாபிரிக்காவில் வெளிநாட்டவர் மீதான வன்முறை;

# குடியேறிகளுக்கு எதிரான அரசியல், உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்காது

**வேலையின்மை, குற்றச்செயல்கள் மற்றும் பொதுச் சேவைகளின் மோசமான நிலைக்கு வெளிநாட்டவர்கள் காரணமல்ல. தலைவர்கள் இதை இன்னும் தெளிவாகக் கூறுவதற்கான துணிச்சலைப் பெற வேண்டும்.**



முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், தென்னாபிரிக்காவில் வெளிநாட்டவர் மீது அதிகரித்து வந்த வெறுப்பைக் கண்டு நெல்சன் மண்டேலா தனது வருத்தத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தினார். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேரணி ஒன்றில் பேசிய ஜனாதிபதி, "நம்மிடம் ஒற்றுமையும் ஒருமைப்பாட்டின் மரபும் இருந்தது. வெளிநாட்டு மக்களின் வருகையால் நாம் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல" என்று கூறினார்.

அதன்பிறகு, வெளிநாட்டவருக்கு எதிரான வன்முறைகள் அவ்வப்போது வெடித்து வருகின்றன. 2008-ஆம் ஆண்டில், குடியேறிகளுக்கு எதிரான தாக்குதல்களில் குறைந்தது 62 பேர் கொல்லப்பட்டனர். இப்போது ஒரு புதிய அலை நாட்டை உலுக்கி வருகிறது. பிரசாரக் குழுக்கள் குடியேறிகள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக நிர்ணயித்த தன்னிச்சையான "காலக்கெடு" நாளான கடந்த செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் பேரணி நடத்தினர். இதற்கு முன்னதாக 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறினர் சில நாடுகள் தங்களது குடிமக்களை விமானம் மூலம் மீட்டெடுத்தன, தனிநபர்கள் பயந்து ஓடினர்.

மே மாதத்தில் நடந்த வெளிநாட்டவருக்கு எதிரான வன்முறையில் தங்கள் நாட்டு குடிமக்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டதாக மொசாம்பிக் கூறுகிறது, மேலும் திங்களன்று ஒரு குடிமகன் கொல்லப்பட்டதாக கானா கூறுகிறது, இருப்பினும் தென்னாபிரிக்க அதிகாரிகள் வேறுபட்ட விவரங்களை அளித்துள்ளனர்.

"ஆபரேஷன் துடுலா" (Operation Dudula) மற்றும் "மார்ச் ரூ மார்ச்" (March & March) இயக்கங்களால் குடியேறிகள் சுகாதார மற்றும் இதர சேவைகளைப் பெறுவதிலிருந்து திட்டமிட்டுத் தடுக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, குடியேறிகள் மக்கள் தொகையில் 5 சதவீதத்துக்கும் குறைவாகவே, அதாவது சுமார் 30 இலட்சம் பேர் மட்டுமே உள்ளனர். ஆனால், பிரசாரகர்கள் இதைவிட 10 மடங்கு அதிகமானோர் இருக்கக்கூடும் என்று நம்பமுடியாத அளவிற்கு உரிமை கொண்டாடுகிறார்கள். மேலும் தாங்கள் சட்டவிரோத குடியேற்றத்தையே குறிவைப்பதாகக் கூறுகிறார்கள். எனினும், முறையான ஆவணங்கள் வைத்திருப்பது, பல தசாப்தங்களாக நாட்டில் வாழ்ந்து வருவது மற்றும் தென்னாபிரிக்கர்களைத் திருமணம் செய்து கொண்டது போன்ற எதுவும் தங்களை அச்சுறுத்தல்களிலிருந்தும் வன்முறையிலிருந்தும் பாதுகாக்கவில்லை என்று குடியேறிகள் கூறுகிறார்கள்.

40 சதவீதத்துக்கும் அதிகமான வேலையின்மை, சமத்துவமின்மை, குற்றச்செயல்கள் மற்றும் சுமையால் திணறும் பொதுச் சேவைகளை எதிர்கொள்ளும் ஏழை தென்னாபிரிக்கர்கள், குறிப்பாக, குடியேறிகள்தான் தங்களின் வேலைகளைப் பறிக்கிறார்கள், சட்டத்தை மீறுகிறார்கள், சுகாதார மற்றும் கல்வி அமைப்புகளுக்குப் பாரமாக இருக்கிறார்கள் என்று அவர்கள் மீது பழிசுமத்துகிறார்கள்.

நாட்டின் நிலையைப் பார்த்து அவர்கள் கோபப்படுவது நியாயமானதுதான், ஆனால் அதற்கு யார் காரணம் என்பதில் அவர்கள் தவறு செய்கிறார்கள். இவை தென்னாபிரிக்கா தானாகவே உருவாக்கிக்கொண்ட பிரச்சனைகள் நிறவெறி ஆட்சியின் கசப்பான மரபும் அதைத் தொடர்ந்த ஊழலும் தவறான நிர்வாகமுமே இதற்குக் காரணம்.

"செனோவாட்ச்" (Xenowatch) கண்காணிப்பு தளத்தின் நிறுவனர்களான ஜீன் பியர் மிசாகோ மற்றும் லோரன் லாண்டோ ஆகியோர், வெளிநாட்டவருக்கு எதிரான இந்த அணிதிரட்டல் என்பது வெறுமனே விரக்தியடைந்த சமூகங்களைப் பற்றியது மட்டுமல்ல என்று வாதிடுகின்றனர். இது "வன்முறையைத் தகுந்த முறையில் கண்டிக்கத் தவறியது உட்பட, அரசினதும் விழிப்புணர்ச்சிக் குழுக்களினதும் செயல்பாடுகள் மற்றும் செயலற்ற தன்மையால் கூட்டாகத் தயாரிக்கப்பட்ட ஒரு அரசியல் முயற்சி" ஆகும்.

நவம்பர் மாதத்தில் நடக்கவிருக்கும் நகராட்சித் தேர்தல்களுக்கு முன்னதாக, இதனால் யாருக்கு லாபம் என்று கேள்வி எழுப்புவது நியாயமானது. "ஆக்ஷன்எஸ்ஏ" (Action SA) என்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள், சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோருவதைத் தவிர குடிமக்களுக்கு வேறு வழியில்லை என்று கூறியுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் சுமாவின் கூட்டாளிகள் "மார்ச் ரூ மார்ச்" இயக்கத்துடன் தொடர்பைக் கொண்டுள்ளனர், மேலும் அவருடைய "உம்கொன்டோ வெ சிஸ்வே" (uMkhonto we Sizwe) கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அதன் நிகழ்வுகளில் கலந்துகொள்கிறார்கள்.

ஜனாதிபதி சிறில் ரமபோசா, சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளைத் தொடங்கும் அதே வேளையில், "பயம், கோபம், வெறுப்பு அல்லது வன்முறையைக்" கண்டிப்பதன் மூலம் அரசியல் கவலைகளைச் சமநிலைப்படுத்த முயன்றுள்ளார். இருப்பினும், அரசாங்கம் இந்த வெளிநாட்டவர் மீதான துன்புறுத்தல் மற்றும் வன்முறையை பெரும்பாலும் ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சினையாகவே குறைத்து மதிப்பிட முயன்றுள்ளது. அடிமட்ட அளவில் சிலர் குரல் கொடுத்தாலும், உயர்மட்டத்தில் இதற்கு முறையான தார்மீகத் தெளிவு இல்லை.

நிறவெறிக்கு எதிரான போராட்டம் என்பது ஒரு ஒட்டுமொத்த ஆபிரிக்கப் போராட்டமாக இருந்தது, அதற்கு மற்ற நாடுகளும் தனிநபர்களும் ஆதரவளித்து தஞ்சம் அளித்தனர். ஆனால் இன்று, மக்கள் தொகையின் பெரும் பகுதியினர், தாங்கள் ஒரு காலத்தில் வீழ்த்த நினைத்த அதே விலக்குதலையும் ஒடுக்குமுறையையும் நோக்கியே பயணிப்பது போல் தோன்றுகிறது. இது ஆபிரிக்கா முழுவதும் உள்ள அரசியல்வாதிகளையும் பொதுமக்களையும் கோபப்படுத்தியுள்ளது.

இது இராஜதந்திரத்திற்கும் நாட்டிற்கு மிகவும் தேவையான சுற்றுலா, வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கும், தென்னாப்பிரிக்காவிற்குத் தேவையான திறமையான மற்றும் கடினமாக உழைக்கும் மக்களை ஈர்க்கும் திறனுக்கும் பாதகமானது. குடியேறிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது தென்னாபிரிக்கர்களைக் கோபப்படுத்தும் பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்துமே தவிர, அவற்றைத் தீர்க்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாரம் ஒரு சிந்தனை 6

# பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம்

பிகுவு பிசகு பிஞ்சு பிட்டி பிடரி பிண்ணாக்கு பித்தம் பிரட்டு பிரமை பிரிவு பிரை பிழி பிழை பிள்ளை பிறவி பிறழ் பின்பு பினை இவை பி.... என்ற தமிழ் எழுத்தில் தொடங்கும் சொற்கள்.

ஒன்றிலிருந்து இரண்டாக. பலவாக என்ற பொருளில் வரும் சொற்கள்.

தாயிலிருந்து பிரிந்து பிறக்கும் சேய். எனவே பிறவி.

பிறவி துன்பமானது. பிறவி துயரமானது. பிறவி துக்கமானது.

நோயைத் தருவது பிறவி. முதுமை தருவது பிறவி. இறப்பு எனும் துன்பம் தருவது பிறவி.

பிறந்தவர் பெருகிய துன்பத்தையே அடைவர். பிறந்தவரின் ஆசையே துன்பத்திற்கு காரணம்.

2570 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கொள்கையை முன்வைத்தவர் புத்தர்.

பிறக்காதவர் பேரின்பம் அடைவர். புத்தர் சொன்னார்.

புத்தரின் துன்பக் கொள்கையை, துயரக் கோட்பாட்டை அழகிய தமிழ் வரிகளில் 1800 ஆண்டுகளுக்கு முன்பு தந்தவர், சாத்தனார் மணிமேகலையில்.

...பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக...
(மணிமேகலை. ஊர் அலர் உரைத்த காதை: 64-67)

ஆசையை விடுவோர், பற்றை நீக்குவோர், துன்பத்தில் இருந்து விடுபடுவர். பிறவிப் பிணியில் இருந்தும் விடுபடுவர்.

எட்டு வழிகள். ஆசையை விடலாம். சொல்கிறது புத்த சமயம்.

நல்நோக்கம் . நல் உறுதி . நல் உரை . நற் செயல் . நல் வாழ்வு . நல் முயற்சி . நல் மனம் . (அவை வழி) நல் ஒடுக்கம்.

எல்லோராலும் கைக்கொள்ளக் கூடியனவா? இந்த எட்டு நல் வழிகள். முடியவே முடியாது. மிகச் சிலராலேயே கைக்கொள்ள. முயல முடியும். முயற்சிக்கலாம். முழுமையாகக் கைக்கொள்வோர் ஒரு சிலரே.

இந்த எட்டு நல்வழிகள். இவற்றைக் கைக்கொள்வதாகச் சொல்வோர் ஏராளமானோர். இவர்கள் புத்தர்கள். புத்த சமயத்தவர்கள். ஆசையை விடாத புத்தர்கள். பற்றை ஒழிக்காத புத்தர்கள். ஆசையை ஒழிக்க முயலாத புத்தர்கள். பற்றைக் கைவிட முயலாத புத்தர்கள்.

பிறவி துன்பமல்ல. பிறவியே இன்பம் என்று இவர்களிடம் சொன்னார்கள். அறிந்தனர். புரிந்தனர். புத்த சமயத்தில் இருந்து வெளிவந்தனர்.

சொன்னவர் ஒருவர் அன்று. இருவர் அல்லர். பலர். தொடக்கி வைத்தவர் காரைக்கால் அம்மையார்.

துன்பம் பெரிய கடல். அதில் அமிழ்துவிடாமல் காக்க ஒருவன் இருக்கிறான். இன்பத்தைத் தருபவன் ஒருவன் இருக்கின்றான். துன்பக் கலப்பில்லாத இன்பத்தை தருபவன் இருக்கின்றான். அவரிடம் செல்லுங்கள் என வழிகாட்டியவர் காரைக்கால் அம்மையார்.

கீழா யினதுன்ப வெள்ளக்
கடல்தள்ளி உள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென்
பீர்விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டன்எண்
தோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன்
னாளுந் தலைநின்மினே.

11ஆம் திருமுறை. 3ஆம் தலைப்பு: இரட்டை மணிமாலை. 9ஆம் பாடல்.

புனை துகிற் போலிப் புத்த சமய வீழ்ச்சியின் தொடக்கம். பத்தி இயக்கத்தின் மீள் எழுச்சி. வித்திட்டவர் 1800 ஆண்டுகளுக்கு முன்பு காரைக்கால் அம்மையார்.

மகிழ்ச்சியானதே பிறப்பு. இன்பத்தை நோக்கியதே பிறப்பு. .. மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.. என முழங்கித் தொடர்ந்தவர் 1475 ஆண்டுகளுக்கு முன்பு திருநாவுக்கரசர்.

குனித்த புருவமுங்
கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும்
பவளம்போன் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய
எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும்
வேண்டுவ தேயிந்த
மாநிலத்தே.

4ஆம் திருமுறை. 81ஆம் பதிகம். தில்லை. 4ஆம் பாடல்.

துறவியாக வேண்டுமா? எட்டு நல்வழிகளைக் கைக்கொள்வதே துன்பமா? வேண்டாம். வாருங்கள். திருவாரூரில் சிவபெருமான் இருக்கிறார். அவரை வணங்குங்கள். பக்தியோடு அணுகுங்கள். அவர் உங்களைத் துறவியாக்குவார். நெஞ்சுறுதியோடும் நேர்மைத் திறனோடும் சொல்கிறார் 1380 ஆண்டுகளுக்கு முன்பு திருஞானசம்பந்தர்.

பிறவி யறுப்பீர்காள் அறவ னாரூரை
மறவா தேத்துமின் துறவி யாகுமே.

1ஆம் திருமுறை. 91ஆம் பதிகம்: திருவாரூர். பாடல் 2.

பிறந்தேன். மகிழ்ந்தேன். மட்டிலா இன்பம் கொண்டேன். துன்பம் தெரியாததே பிறவி. மானிடப் பிறவியே மேலான பிறவி. மகிழ்ச்சிக்குரிய பிறவி. அடித்துச் சொல்பவர் 1300 ஆண்டுகளுக்கு முன் சுந்தரர்.

தில்லைக்குச் சுந்தரர் செல்கிறார் அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசப்பெருமானின் திருநடனக் காட்சி காண்கிறார். கண்ணில் மகிழ்ச்சி அருவியாகச் சொரியப் பாடுகிறார். அந்த நிகழ்வை 850 ஆண்டுகளுக்கு முன் சேக்கிழார் சொல்கிறார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உன்றன் திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே
எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர்
சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும்
பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

12ஆம் திருமுறை. திருமலைச் சருக்கம். 5. தடுத்தாட்கொண்ட புராணம். பாடல் 253.

பாண்டிய வழிவந்த தமிழ் மன்னன். அநுராதபுரத்தில் அவன் ஆட்சி. முதலாம் சேனன். அவனுக்கு மகள். வாய் பேச முடியதவள்.

ஆற்றல் உள்ளவர். திறமை மிக்கவர். ஞானியர். அவளைப் பேச வைப்பர் எனப் புத்தத் துறவிகளை அணுகுகிறான் முதலாம் சேனன். அவர்களால் முடியவில்லை.

தில்லைக்குச் சேனன் செல்கிறான். அங்கே மாணிக்கவாசகரிடம் அருள் கேட்கிறான். அன்று ஊமைப் பெண்ணல்லோ. இன்று பேசும் பெண்ணல்லோ. ...பேசுவதும் திருவாயால்... (திருமுறை 08012001) என்கிறார் மாணிக்கவாசகர். அவள் தமிழைப் பேசத் தொடங்குகிறாள். புத்தனாகச் சென்றவன். சைவத் தமிழனாக அநுராதபுரம் திரும்புகிறான் முதலாம் சேனன்.

1200 ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கவாசகர் சொல்கிறார். மனிதனாகப் பூமியில் பிறப்பதே பேறு. தேவர்கள் சொல்வதாகச் சொல்கிறார். மனிதப் பிறவி எடுத்துச் சிவபெருமானை வழிபடாமல் நாங்கள் காலத்தைக் கடத்துகிறோமே, வீணாக்குகிறோமே என்கின்றனராம் தேவர்கள்.

புவனியிற் போய்ப்பிற
வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ
மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற
வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை
வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும்
மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க்
கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை
ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி
எழுந்தரு ளாயே.

8ஆம் திருமுறை. 20ஆம் பதிகம். திருப்பள்ளியெழுச்சி. பாடல் 10.

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

# இந்தவார ராசிபலன் 05.07.2026 - 11.07.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 21

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப நபர்களின் ஆதரவு வழக்கம் போல் தொடரும். உடன்பிறப்புகளால் சில ஆதாயங்கள் உண்டு. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உறவினர்களால் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். பொது பிரச்சனைகளில் அதிகம் தலையிடாமல் இருக்கவும். குடும்பத்தில் சுப விரயங்களால் எதிர பார்த்ததை விட அதிகம் செலவுகள் ஏற்படும். உத்யோகத்தில் இருந்த எதிர்ப்புகள் குறையும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் புது திட்டங்கள் நிறைவேறும். மனதில் நினைத்திருந்த காரியம் எதுவாக இருந்தாலும் அது நிறைவேற வழி பிறக்கும். புது நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். வாடகை வீட்டில் வசிப்பவர்கள் வேறு வீட்டிற்கு மாற்றலாகி செல்லகூடும். கடன் பிரச்சனையில் அதிகம் சிக்காமல் பார்த்துக்கொள்ளவும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்தல் அவசியம். புது வண்டி, வாகனம் வாங்கும் முயற்கள் தள்ளி போகும். உத்யோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் பல எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். பல நாட்களாக இருந்து வந்த மன பிரச்சனை நாளடைவில் தீரும். எதிலும் சிக்கனமாக இருந்து சேமிக்க பழகவும். பெண்கள் வகையில் ஒரு சில நன்மைகள் உண்டு. எதிர்பாராத சில மருத்துவ செலவுகள் வரும். கணவன் மனைவிடையே அன்யோன்யம் ஏற்படும். குடும்ப விஷயங்களை வெளியில் யாரிடத்திலும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்யோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். ஆன்மீக எண்ணம் மேலோங்கும். குடியிருக்கும் வீட்டை சீர் அமைக்க வேண்டிவரும். கடனை கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம். கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். அக்கம் பக்கம் உள்ளவர்களின் ஆதரவு பெருகும். திட்டமிட்ட பயணங்கள் தள்ளி கொண்டு போகும். கோர்ட் வழக்கில் இழுபறி நிலை நீடிக்கும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில், மந்த நிலை இருக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும். வீட்டில் சுப காரிய பேச்சுக்கள் நடக்கும். சஞ்சலம், குழப்பத்தால் முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் ஏற்படும். கணவன் மனைவியிடையே சுமூக நிலை காணப்படும். குடும்பத்தில் வளைந்து கொடுத்தது போவது நல்லது. அவசர நேரங்களில் எடுக்கும் முடிவுகளால் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். நீண்ட தூர பிரயாணங்களை தவிர்க்கவும். உத்யோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். தொழில், வியாபாரம் மேன்மையடையும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தன வரவும், புதிய பொருள் சேர்க்கையும் இருக்கும். உங்களை சுற்றி இருப்பவர்கள் பல வழிகளில் உதவியாக இருப்பர். உடன்பிறப்பு வழியில் மனக்கசப்புகள் உண்டாகும். யாரும் ஜாமீன் கையெழுத்து போட்டு பிரச்சனையில் மாட்டிக்கொள்ள வேண்டாம். எதிர்பாராத வகையில் பொருள் விரயம் ஏற்படும். உத்யோகம் தொடர்பான பயணம் ஏற்படும். தொழில், வியாபாரம் சிறப்பாக அமையும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, உங்கள் பேச்சு திறமையால் அனைத்து விஷயங்களையும் சாதித்து காட்ட முடியும். பாலிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவிடையே ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். குடும்பத்தில் புது நபர்களின் வருகை இருக்கும். தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வாகனங்களை இயக்கும் பொழுது கவனம் தேவை. உத்யோகத்தில் பணிச்சுமை கூடும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, புதிய முயற்சிகளில் அதிக ஈடுபாடு வரும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை பெற முடியும். வாகன பராமரிப்பு செலவுகள் கூடும். வீட்டில் சுபகாரிய பேச்சுகள் நடைபெறும். பூர்வக சொத்துக்கள் மூலம் லாபம் வரும். வாழ்க்கைதுணையின் ஆலோசனை கிடைக்கும். கடன் பிரச்சனைகள் கட்டுக்குள் இருக்கும். எதிர்பாராத மருத்துவ செலவுகள் வரும். மறைமுக எதிரிகளின் தொல்லை நீங்கும். உத்தியோகத்தில் பெரிய பதவிகள் தேடி வரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தின் பேராதரவை பெற முடியும். தியானத்தால் மன நிம்மதி ஏற்படும். எதிலும் மனநிறைவு இருக்கும். முன் பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். காரிய தடை விலகும். புது வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. வரவேண்டிய பணம் எந்த வித தடையுமின்றி வரும். உடன்பிறப்பு வகையில் சில சங்கடங்கள் வரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்திற்காக நிறைய தியாகம் செய்ய வேண்டிவரும். மனதில் பட்டதை தைரியமாக பேசும் துணிச்சல் இருக்கும். குடும்ப வளர்ச்சியில் உங்கள் பங்கு அதிகமாக இருக்கும். வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொள்ள முடியும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பர். எதிர்பாலினத்தவருடன் பழகும்போது எச்சரிக்கையாக இருக்கவும். நீண்ட நாட்களாக நடக்காத காரியம் ஒன்று நடந்து முடியும். உத்யோகத்தில் பாராட்டு கிடைக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்பம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் நல்ல விஷயங்கள் நடக்க ஆரம்பிக்கும். தெய்வ வழிபாடு சிறப்பாக அமையும். பிரியமானவர்களிடம் முக்கிய விஷயங்களில் அனுசரித்து செல்வது நன்மை தரும். பொது ஜன தொடர்பு அதிகரிக்கும். புதுமையான விஷயங்களில் ஆர்வம் ஏற்படும். கணவன் மனைவிடையே பனிப் போர் ஏற்படும். குடும்ப சூழ்நிலை திருப்திகரமாக இருக்கும். தடைப்பட்டு வந்த காரியங்கள் விரைவில் கைகூடும். உத்யோகத்தில் மாற்றம் ஏற்படும். புது தொழில் யோகம் அமையும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு ந்து வந்த மமீன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் பல நன்மைகளை பெற முடியும். தன வரவு கூடும். வீட்டு பராமரிப்பு செலவு அதிகமாகும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வாகனத்தில் செல்லும் போது பொறுமை அவசியம். வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. உத்யோகத்தில் நிதானமாக செயல்படவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புதிய அரசியலமைப்பும் தமிழர் தரப்பின் ஒருமித்த கோரிக்கையும் எதிர்பார்ப்புகள் சாத்தியமாகுமா?



கந்தையா அருந்தவபாலன்

கொழும்பு அரசியலில் அதிரடி யாக இடம்பெற்றுவரும் முக்கியநபர்களின் கைதுகள், விசாரணை கள், வழக்குகள் எவையும் தமிழ் மக்க ளைப் பொறுத்து பெரியளவிலான அதிர் வலைகளை ஏற்படுத்துவதாகத் தெரிய வில்லை. அவர்களுக்கு அவை வெறும் செய்திகளாகவே கடந்து செல்கின்றன. காரணம் அவை அவர்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை அல்ல என்பதுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட விடயங்கள் அவைபோன்று அரங்கத்துக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதும் அவர்களின் நம்பிக்கையாக இருக்கக்கூடும். அதுபோலவே அவர்கள் எதிர்நோக்கிவரும் அரசியல் பிரச்சினை உட்பட காணி, காணாமலாக்கப்பட்டோர், இனப்படுகொலைகள் போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வு மற்றும் நீதி தொடர்பாகவும் நம்பிக்கையற்றவர்களாகவே இருந்து வருகின்றனர். ஆனால் தமிழ் மக்கள் நம்பிக்கையற்றிருந்தாலும் அரசியல்வாதிகள் இப்பிரச்சினைகள் தொடர்பாகத் தொடர்ந்தும் எதிர்வினைகளை ஆற்றியவண்ணம் உள்ளனர். அந்தவகையில் அவர்கள் புதிய அரசியலமைப்பு தொடர்பான நம்பிக்கையை வெளிப்படுத்தி வருவதுடன் அதில் முன்வைப்பதற்கான அரசியல் தீர்வு தொடர்பான பொது இணக்கப்பாடொன்று எய்தப்படவேண்டும் என விரும்புகின்றனர். அவர்களின் இந்த எதிர்பார்ப்புகள் சாத்தியமாகும் நிலைமை காணப்படுகிறதா?

அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கான சாத்தியம் எவ்வளவுக்கு உள்ளது? தற்போதைய அரசாங்கம் பதவியைப் பெறுவதற்காகத் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவோம் என்பது முக்கியமானதொன்று. தேர்தல் காலத்தில் இதேபோல வழங்கப்பட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் விரும்பினாலுங்கூட அது பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ள இன்றைய நிலையிலும் அதனால் நிறைவேற்ற முடியாத சூழ்நிலைகள் மேலும் மேலும் இறுகி வருகின்றன. முன்னைய ஆட்சியாளர்களைப்போல இல்லாது இந்த அரசாங்கம் மக்கள் நலன்சார்ந்து செயற்பட முனைந்தாலும்கூட முன்னைய ஆட்சியாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார கையறுநிலையும், தொடரும் சர்வதேச பொருளாதார நெருக்கடியும் அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலைமைகளை உருவாக்கி வருகிறது. அதனால் இன்று சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் அரசாங்கம் இருந்து வருகிறது.

மக்களின் வாழ்க்கைச் செலவு வேகமாக அதிகரித்து வருவதுடன் விவசாயிகள் உட்பட முக்கியமான துறைசார்ந்த தொழிலாளர்கள் அதிகளவில் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். இந்நிலைமை மேலும் கூர்மையடைவதற்கான வாய்ப்புகள் தென்படுவதாக பொருளாதார வல்லுநர்கள் எதிர்வுகூறி வருகின்றனர். இதுவரை நாட்டைத் தாங்கிப்பிடிக்க அதிகளவில் உதவியது சர்வதேச நாணய நிதியத்தின் கடன்மட்டுமே. அதுவும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது என்பதுடன் பெறப்பட்ட கடன்களை மீளச்செலுத்துவதற்கான கடப்பாடும் அதிகரிக்கப் போகிறது. இவற்றால் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் அரசாங்கத்தின்மீது மக்கள் மத்தியில் தற்போது துளிர்விடத் தொடங்கியுள்ள நம்பிக்கையீனத்தையும் அதிருப்தியையும் எதிர்காலத்தில் மேலும் மேலும் அதிகரிகரிக்கூடும். அரசாங்கத்திடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருந்தாலும்கூட எதிர்க்கட்சிகளின் பல வீனங்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னைய ஆட்சியாளர்கள்மீதான அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளும், அந்நடவடிக்கைகள் தொடர்பான பரப்புரைகளுமே இன்று அதற்கு ஆறுதலை அளித்துவருகிறது என்பதுதான் உண்மை. ஆனால் இவை நீண்ட காலத்துக்குப் பயன்தரா.

**தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினை என்று எதுவுமில்லை, இருப்பதெல்லாம் பொருளாதார, சமூகப்பிரச்சினைகள் மட்டுமே என்ற கொள்கையுடைய, தோலிருக்கச் சுளையெல்லாம் பிடுங்கப்பட்ட இன்றுள்ள மாகாணசபைகளையே நிராகரிக்கும் தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) அரசாங்கத்தின்முன் வைப்பதற்கு ஒற்றையாட்சி, ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி, முழுமையான சமஷ்டி, அல்லது சமஷ்டி என்று சொல்லப்படாத அதேபோன்ற ஒன்று எனத் தமிழ்த்தரப்புகள் கச்சைகட்டிக்கொண்டு நிற்பதையே பார்க்க முடிகிறது.**

இதனால் அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைச் செலவு தொடர்பாகவே அதிகளவு கரிசனை கொள்ளவேண்டியதொரு நிலைக்குத் இன்று தள்ளப்பட்டுள்ளது. இதனையே பிரதமர் ஹரிணியின் அண்மைய கருத்துகளும் பிரதிபலிக்கிறது. இந்நிலையில் அது புதிய அரசியலமைப்பு உட்பட நாட்டின் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவற்கான முயற்சிகளில் இறங்குவதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது என்பதற்கப்பால் அவ்வாறான மாற்றங்களுக்கு வருங்காலத்தில் மக்களின் ஆதரவு கிடைக்குமா என்பதுவும் கேள்விக்குறியே. இதனால் அரசாங்கம் முன்னர் கூறியது போல, தமிழ்க் கட்சிகள் இன்று எதிர்பார்ப்பதுபோல புதியதொரு அரசியலமைப்பு வருவதற்கு வாய்ப்பு மிகமிகக்குறைவாகவே இருக்கும். முழுமையான அரசியலமைப்பு மாற்றம் ஒன்றிற்குப் பதிலாக எதிர்க்கட்சிகள் உட்பட நாட்டுமக்களின் நீண்டகால விருப்பமான தற்போதுள்ள நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றி பாராளுமன்ற ஆட்சிமுறைக்கான அரசியலமைப்புச் சீர்திருத்தமொன்றுக்கு அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியில் முயல்வதற்கு வாய்ப்புள்ளது. அதனை அடுத்துவரக்கூடிய தேர்தலில் வெற்றி பெறுவதற்கான உத்தியாக அரசாங்கம் கையாளக்கூடும்.

தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்ப்பது போல புதிய அரசியலமைப்பு ஒன்று வருவதாக எடுத்துக்கொண்டாலும்கூட அவர்களால் ஒன்றுபட்டு ஒரு அரசியல் தீர்வு யோசனையை முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளதா? அவ்வாறு முன்வைத்தாலும் அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா? அரசாங்கம் ஏற்றுக்கொண்டாலும் அது கருத்துக்கணிப்பில் சிங்கள மக்களால் அங்கீகரிக்கப்படுமா? கடந்தகாலப் பட்டறிவின் அடிப்படையில் இக் கேள்விகள் அனைத்துக்குமான ஒரே விடை இல்லை என்பதாகவே இருக்கும்.

இவ்விடயத்தில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுபடுவதற்குத் தடையாக பலகாரணிகள் இருக்கின்றன. ஒன்று, தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான ஒரே தீர்வு உச்சமட்டச் சமஷ்டிக்கட்டமைப்பு என்பதில் ஒன்றுபட்டு நின்றாலும் அது தொடர்பான அணுகுமுறையில் அவை ஒவ்வொன்றும் வேறுபட்டு நிற்பது. இவ்வேறுபாட்டுக்குத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் மக்கள் தொடர்பான கடந்தகால செயற்பாடுகளும் நம்பிக்கைத் துரோகங்களும் ஒரு காரணமாக உள்ளது. இரண்டாவது பிரச்சினைகளை மக்கள் மையத்திலிருந்து நோக்குவதற்குப் பதிலாகக் கட்சிமையத்திலிருந்து நோக்குவது. எந்தவொரு உடன்பாடு என்றாலும் அதில் கட்சிக்கான இலாப நட்டக் கணக்குக்கு முக்கியமளிப்பது. அடுத்தது தமிழ்த் தலைவர்களிடத்து நிலவும் ஈகோ எனப்படும் தன்முனைப்பு, வெறுப்பு மற்றும் ஐயங்கள். இன்னொன்று கட்சிகள் மற்றும் தலைவர்கள் மீதான வெளிப்புறச் செல்வாக்கு அல்லது அழுத்தங்கள்.

இவையெல்லாவற்றையும் கடந்து தமிழ்த்தலைவர்கள் ஒரு பொதுவான தீர்வு முன்மொழிவுக்கு வருகிறார்கள் எனக்கருதிக் கொள்வோம். அது சமஷ்டியாக இல்லாவிட்டாலும் நிச்சயமாக தற்போதைய மாகாணசபை முறைமையாக இருப்பதற்கான வாய்ப்பில்லை. சிங்கள ஆட்சியாளர்கள் எவராக இருந்தாலும் சமஷ்டி அல்ல சமஷ்டி போலப் பெயரளவில்கூட எதுவும் இருக்கக்கூடாது என்பதில் ஒத்த நிலைப்பாடு கொண்டவர்கள். மாகாணசபைகளுக்கு முதலில் முன்மொழியப்பட்ட மாகாண அரசு என்ற பெயரை நிராகரித்து அரசு என்பதற்குப்பதிலாக சபை என்ற சொல்லே இருக்கவேண்டுமென்பதில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா விடாப்பிடியாக இருந்தமை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. பின்னர் அச்சபைகளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை பிடுங்கும் முறையைப் பிரேமதாச தொடக்கிவைக்க அது தொடர்கதையாகி இறுதியில் சுற்றுப்புறச் சூழல் தொடர்பான விடயத்தைப் பிடுங்குவதில் இன்றுள்ள அரசாங்கம் வந்துநிற்கிறது.

இவ்வாறான ஒருநிலையில் தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினை என்று எதுவுமில்லை, இருப்பதெல்லாம் பொருளாதார, சமூகப்பிரச்சினைகள் மட்டுமே என்ற கொள்கையுடைய, தோலிருக்கச் சுளையெல்லாம் பிடுங்கப்பட்ட இன்றுள்ள மாகாணசபைகளையே நிராகரிக்கும் தேசிய மக்கள் சக்தி ( ஜே.வி.பி) அரசாங்கத்தின்முன் வைப்பதற்கு ஒற்றையாட்சி, ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி, முழுமையான சமஷ்டி, அல்லது சமஷ்டி என்று சொல்லப்படாத அதேபோன்ற ஒன்று எனத் தமிழ்த்தரப்புகள் கச்சைகட்டிக்கொண்டு நிற்பதையே பார்க்க முடிகிறது. பொதுவான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு மட்டும் தமிழ்க்கட்சிகள் ஒன்று கூடுவதற்குப் பதிலாக அவை முதலில் ஒரே குடைக்குள் வரவேண்டும் என்பதே மக்களின் விருப்பம் மட்டுமல்ல இன்றைய அரசியல் சூழ்நிலையில் அது அவசியமான ஒன்றுங்கூட. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க தீர்வுப்பொதி ஒன்று அவசியம் என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது என்றாலும் இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளமையும் கச்சைகட்டி நிற்பதுவும் யாருமில்லாத கடையில் தேநீர் ஆற்றுவது போலவே தென்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெற்காசியாவை ஒன்றிணைக்கும் காலநிலை நடவடிக்கை!




2004 சுனாமிக்குப் பிறகு இலங்கையைத் தாக்கிய மிகமோசமான இயற்கை பேரழிவு 'டித்வா' சூறாவளியாகும். இதில் 640-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர், காணாமல் போன 170-க்கும் அதிகமானோருக்கு நேர்ந்தகதி இன்னமும் அறியப்படவில்லை. மேலும் நாடு முழுவதும் 22 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். இதன் பொருளாதார இழப்பு 4 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் நான்கு சதவீதத்திற்குச் சமமாகும். இவ்வளவு பெரிய அளவிலான பேரழிவை இலங்கையினால் தனியாக எதிர்கொள்ளமுடியவில்லை. சர்வதேச உதவி அவசியமாக இருந்ததுடன், அது விரைவாகவும் கிடைத்தது.

ஆவசர நிவாரணம், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் சேதமடைந்த உள்கட்டமைப்புகளை சீரமைப்பதற்கான உதவிகளை வழங்கிய முதல் நாடு இந்தியாவாகும். ஏனைய தெற்காசிய நாடுகளும் மனிதாபிமான உதவிகளை வழங்கின. மாலதீவு மக்கள் தங்கள் அரசாங்கம் வழங்கியதை விடவும் அதிகமாக திரட்டி வழங்கினர். இந்த கூட்டுச் செயற்பாடு மனிதாபிமான நிவாரணத்தையும் தாண்டிய முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. தெற்காசியாவில் தனிமனிதர்களுக்கு இடையிலான அனுதாபங்கள், தேசியத்தையும் மதத்தையும் கடந்து நிற்கமுடியும் என்பதை இது காட்டியது.

தெற்காசியா என்பது பிராந்திய ஒத்துழைப்பை விடவும் பெரும்பாலும் அரசியல் போட்டித் தன்மையுடனேயே தொடர்புபடுத்தப்படுகிறது. இப்பிராந்தியத்தில் உள்ளநாடுகளுக்கு இடையிலான உறவுகள் போர்கள், எல்லைத் தகராறுகள், பாதுகாப்பு கவலைகள் மற்றும் அரசியல் அவநம்பிக்கை ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த பிரிவினைகள், பிராந்தியத்தில் ஒத்துழைப்புக்கான பயனுள்ள நிறுவனங்களை உருவாக்குவதையும் தடுத்துள்ளன. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சக்கத்தின் **(South Asian Association for Regional Cooperation -SAARC)** அனுபவம் இப்பிரச்சினையை விளக்குகிறது.

1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சார்க் சார்க் அமைப்பு வர்த்தகம், விவசாயம், கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்புமற்றும் அனர்த்த முகாமைத்துவம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நான்கு தசாப்தங்களுக்குப் பின்னரும் அதன் சாதனை ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது. உறுப்பு நாடுகளுக்கு இடையிலான அரசியல் கருத்து வேறுபாடுகள் உச்சிமாநாடுகளை முடக்கியுள்ளன (கடைசிமாநாடு 2014 இல் நடைபெற்றது). மேலும் பல பிராந்திய முயற்சிகள் வெறும் பிரகடனங்களுக்கு அப்பால் நகர்வதையும் இது தடுத்துள்ளது.

ஆசியான் **(ASSOCIATION OF SOUTH EAST ASIAN NATION - ASEAN)** அமைப்புடன் ஒப்பிடுகையில் சார்க் வேறுபாடு வியப்பளிக்கிறது. தென்கிழக்கு ஆசியாவும் எல்லைத் தகராறுகள், கருத்தியல் பிரிவினைகள் மற்றும் அரசியல் வேறுபாடுகளைக் கண்டுள்ளது. ஆனால் ஆசியான், முடிந்தவரை அரசியல் கருத்து வேறுபாடுகளில் இருந்து பொருளாதார மற்றும் செயல்பாட்டு ஒத்துழைப்பை வேறுபடுத்திப் பார்த்தது. இதன் விளைவாக, இன்று ஆசியான் பிராந்தியத்திற்குள்ளான வர்த்தகம், அப்பிராந்தியத்தின் மொத்த வர்த்தகத்தில் சுமார் கால் பங்கை (25 சதவீதம் ) கொண்டுள்ளது.

தெற்காசியாவில் இதற்கு இணையான எண்ணிக்கை வெறும் ஐந்து சதவீதமாகவே உள்ளது. இந்த தோல்வியின் பொருளாதாரச் சுமையை இப்பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு நாடும் சுமந்து வருகிறது. குாலநிலை மாற்றம் ஒருமாறுபட்ட அணுகுமுறையைக் கையாள்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இது அரசியல் விவாதங்களைத் தீர்ப்பதற்கான மாற்றுஅல்ல, ஆனால் ஒத்துழைப்பு அவசியமானதாகவும் அரசியல் ரீதியாகச் சாத்தியமானதாகவும் இருக்கும் ஒருகளத்தை இது வழங்குகிறது. வெள்ளம், சூறாவளி, வறட்சி மற்றும் வெப்ப அலைகள் தேசிய எல்லைகளை அறிவதில்லை. நாடுகள் அரசியல் விவகாரங்களில் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், தாங்கள் அனைவரும் ஒரேமாதிரியான சுற்றுச்சூழல் அபாயங்களை எதிர்கொள்கிறோம் என்பதை அங்கீகரிக்கமுடியும்.

இந்தவாரம் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் 'ஆயுத மோதல்களைத் தடுப்பதற்கான உலகளாவிய கூட்டமைப்பு' ஏற்பாடு செய்திருந்த 'காலநிலை, அமைதி மற்றும் பாதுகாப்பு' தொடர்பான மாநாடு, காலநிலை மாற்றம் என்பது இனி சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல என்று ஏற்றுக்கொள்ளும் போக்கு அதிகரித்து வருவதை பிரதிபலித்தது. தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள், கல்வியாளர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் இளைஞர்களின் இந்த சந்திப்பு, தேசிய வேறுபாடுகளைக் கடந்த இதயங்களினதும் மனங்களினதும் சங்கமமாக அமைந்தது. இது மற்றொரு முக்கியமான அம்சத்தையும் முன்னிலைப்படுத்தியது.

குாலநிலை மாற்றத்திற்கான பயனுள்ள பதிலடி என்பது அரசாங்கங்களிடம் இருந்து மட்டும் வரமுடியாது. ஆவை நேரடியாகப் பாதிக்கப்படும் சமூகங்களின் அனுபவங்களின் அடிப்படையில் அமையவேண்டும். இது விடயத்தில் டித்வா சூறாவளியைத் தொடர்ந்த இலங்கையின் அனுபவம் முக்கிய கவனத்துக்குரியதாகும். இது ஏன் பருவநிலைக் கொள்கையில் சமூகப் பங்கேற்பு ஒரு அங்கமாக இருக்கவேண்டும் என்பதை விளக்குகிறது. மீளக்கட்டியெழுப்புவது என்பது சேதமடைந்த உள்கட்டமைப்பை மீண்டும் உருவாக்குவது மட்டுமல்ல. இது வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பது, நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் பொதுநிறுவனங்களுக்கும் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுமாகும்.

காத்மாண்டு மாநாட்டில் தங்களது சமர்ப்பணங்களில் மூலோபாய ஆய்வுகளுக்கான பிராந்திய மையம் மற்றும் தேசிய சமாதான பேரவை ஆகியவை எதிர்கால அனர்த்த நடவடிக்கைகளுக்கான பாடங்களைக் கண்டறிய, டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் சமூகங்களின் அனுபவங்களை வழங்கின. அவர்களின் ஆய்வுகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு, பெரும்



பாலும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு விவாதத்தில் சமூகத்தின் குரல்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தன.

இந்த ஆராய்ச்சி கடுமையான வெள்ளம் மற்றும் மண்சரிவுகளை எதிர்கொண்ட சமூகங்களைமையமாகக் கொண்டிருந்தது. பௌதீக அழிவுகளை மட்டும் பார்க்காமல், வாழ்வாதாரம், நிலஉரிமை, இடமாற்றம், இழப்பீடு மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றின் மீதான தாக்கத்தையும் அது ஆராய்ந்தது. முனிதாபிமான உதவியின் பற்றாக்குறையால் அல்லாமல், தீர்க்கப்படாத சமூக மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளாலேயே மீட்புப் பணிகள் பெரும்பாலும் மந்தமடைகின்றன என்பதை இந்த கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பங்கேற்ற பலரும் தங்களின் வீடுகளுடன் சேர்த்துபயிர்கள், விவசாய நிலங்கள் மற்றும் வருமான ஆதாரங்களையும் இழந்திருந்தனர். சில குடும்பங்கள் அனர்த்தம் நடந்து பல மாதங்கள் கடந்த பின்னரும் பள்ளிகளிலும் தற்காலிக முகாம்களிலும் அல்லது உறவினர்களின் வீடுகளிலும் தொடர்ந்து வசித்து வந்தனர். ஆதிக ஆபத்துள்ள பகுதிகளிலிருந்து இடமாற்றம் செய்வது அவசியம் என்பதை பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்ட போதிலும், தங்களின் வாழ்வாதாரங்களை இழக்கமாட்டோம் அல்லது தங்களின் சமூகங்களிலிருந்து பிரிக்கப்படமாட்டோம் என்ற உறுதியை அவர்கள் எதிர்பார்த்தனர்.

பலரைப் பொறுத்தவரை, மிகப்பெரிய கவலை இடமாற்றம் செய்வது பற்றியது அல்ல. மாறாக, இடமாற்றத்திற்குப் பிறகு விவசாய நிலங்கள், பள்ளிகள், சுகாதார சேவைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கான வசதிகள் கிடைக்குமா என்பது குறித்த விடயமேயாகும்.

முடிவெடுக்கும் செயல்பாட்டில் உள்ள பலவீனங்களையும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. நேர்காணல் செய்யப்பட்டவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர், இடமாற்ற முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன்னர் தங்களிடம் ஆலோசனை கேட்கப்படவில்லை என்று கூறினர். அதே நேரத்தில் தங்களின் கருத்துக்கள் சரியாக பரிசீலிக்கப்பட்டதாக மிகச் சிறிய சிறுபான்மையினரே நம்பினர். இடமாற்றம் என்பது தங்களின் பங்களிப்போடு நடக்க வேண்டும் என்பதும், சாத்தியமான எல்லா இடங்களிலும் தற்போதுள்ள சமூகங்களை சிதறடிப்பதற்குப் பதிலாக அவர்களை ஒன்றிணைத்து வைத்திருக்கவேண்டும் என்பதுமே மக்களிடமிருந்து வந்த வலுவான செய்தியாக இருந்தது.

இந்த ஆய்வின் மூலம் வெளிவந்த மற்றொருவிடயம், இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர் சமூகங்களின் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய நிலையாகும். தங்களின் வீடுகள் சேதமடைந்த குடும்பங்கள், தலைமுறைகளாக தாங்கள் வசித்து வந்த வீடுகளுக்கு சட்டப்பூர்வ உரிமைப் பத்திரம் இல்லாததால், கிடைக்கக்கூடிய முழுமையான இழப்பீட்டை எப்போதும் பெறமுடியாமல் போவதை அவர்கள் உணர்ந்தனர். எனவே, காலநிலை தொடர்பான அனர்த்தங்கள், இந்தச் சூறாவளிக்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே நிலவி வந்த நில உரிமை மற்றும் அரசாங்க உதவிகளை சமமாக அணுகுதல் போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன.

இந்தக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பரிந்துரைகளில் பின்வருவன அடங்கும். இடமாற்றத் திட்டங்கள் சமூகவலைப் பின்னல்களையும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கவேண்டும், தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிலப் பயன்பாட்டுக்கான கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும், இழப்பீட்டு நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட வேண்டும், மற்றும் அனர்த்த முகாமைத்துவ திட்டமிடலில் சமூகங்கள் முழுமையாகப் பங்கேற்கவேண்டும். மேலும், வலுவான ஆரம்பகால எச்சரிக்கை அமைப்புகள், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த தகவல் தொடர்பு மற்றும் அனர்த்த மீட்பு நிதிகளை நிர்வகிப்பதில் கூடுதல் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றுக்கும் அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இந்தப் பிரச்சினைகள் இலங்கைக்கு மட்டும் உரித்தானவை அல்ல. தெற்காசியா முழுவதிலும், காலநிலை தொடர்பான அனர்த்தங்கள் இதேபோன்ற பலவீனங்களை வெளிப்படுத்தி வருகின்றன. அது பங்களாதேஷில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு, நேபாளத்தில் பனிப்பாறைகள் உருகுவது, இந்தியாவில் ஏற்படும் வெப்ப அலைகள் அல்லது மாலதீவில் ஏற்படும் கடலோர அரிப்பு என எதுவாக இருந்தாலும், மீட்புப் பணிகள் என்பது நிதி ஆதாரங்களை எவ்வளவு சார்ந்துள்ளதோ, அதே அளவு பயனுள்ள பொதுநிறுவனங்கள் மற்றும் சமூகப் பங்களிப்பையும் சார்ந்துள்ளது என்பதை அரசாங்கங்கள் கண்டறிந்துள்ளன.

நாடுகள் ஒன்றையொன்று தங்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதற்கு கணிசமான வாய்ப்புகள் உள்ளன. இங்குதான் சார்க் அமைப்புதான் இழந்த சில முக்கியத்துவத்தை மீண்டும் பெறமுடியும். அனர்த்த முகாமைத்துவம், உணவுப் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கையாளும் ஒப்பந்தங்களும் நிறுவனங்களும் ஏற்கனவே இந்த அமைப்பிடம் உள்ளன. பரந்த அரசியல் தகராறுகள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு அனுமதிப்பதற்குப் பதிலாக, உறுப்பு நாடுகள் அனைவருக்கும் பயனளிக்கும் விடயங்களில் கவனம் செலுத்தலாம்.

கூட்டுப் பேரிடர் தயார்நிலை, பிராந்திய ஆரம்பகால எச்சரிக்கை அமைப்புகள், அறிவியல் ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவி மற்றும் காலநிலை தகவலமைப்பு ஆகியவை நடைமுறையில் முன்னேற்றம் காணக்கூடிய சாத்தியமான பகுதிகளாகும். தெற்காசிய ஒற்றுமை மற்றும் அக்கறையின் சமீபத்திய பயனாளியாக, இலங்கைக்கு இது விடயத்தில் ஒரு சிறப்பு கடமை உள்ளது.

அனைத்து தெற்காசிய நாடுகளின் நண்பனாக, சார்க் ஒத்துழைப்பின் மறுமலர்ச்சியில் இலங்கை ஒரு பயனுறுதியுடைய (நடுநிலையான) பங்கை வகிக்கமுடியும். சிவில் சமூக அமைப்புகள் தங்களின் அனுபவங்களையும் கற்றுக்கொண்ட பாடங்களையும் மற்ற நாடுகளிலுள்ள தங்களின் சக அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை நிறைவு செய்யும் வகையில், அடிமட்டத்திலிருந்து பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்த உதவ முடியும்.

குாலநிலை மாற்றம் தெற்காசியாவைப் பிரிக்கும் அரசியல் கருத்துவேறுபாடுகளை நீக்கிவிடாது. ஆனால், அரசாங்கங்களின் நலன்கள் எங்கு ஒத்துப்போகின்றனவோ, அங்கு அவர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான ஒரு கட்டாயக் காரணத்தை அது உருவாக்குகிறது. 'டித்வா' சூறாவளி இலங்கையின் பாதிக்கப்படக்கூடிய தன்மையையும், அனர்த்தம் ஏற்பட்டபோது அண்டை நாடுகள் உதவ முன்வந்ததையும் நிரூபித்துக் காட்டியது. அடுத்த கட்ட நடவடிக்கை என்பது, அந்த மனிதாபிமானப் பதிலை ஒரு நிலையான பிராந்திய ஒத்துழைப்பாக மாற்றுவதாக இருக்கவேண்டும். குாலநிலை ஒத்துழைப்பு என்பது தெற்காசிய அரசாங்கங்களும் சிவில் சமூகங்களும் இணைந்து செயல்படும் ஒரு முயற்சியாக மாறக்கூடும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்தேசிய அரசியலாளர்கள் தமிழக முதல்வரிடம் கையளிப்பது தீர்வுக்கான கோரிக்கையா? முறைப்பாடுகளின் புகாரா?

பனங்காட்டான்



> தமிழக புதிய முதலமைச்சர் ஜோசெப் விஜய் அரசியலில் அசாதாரண ஆச்சரிய விதத்தில் புகுந்தவர். சினிமாவூடாக அரசியலில் நுழைந்து அதற்கான இடத்தைப் பெற்ற இவர் இன்னும் நூறு நாட்களைக் கடக்கவில்லை. ஆதலால் இன்னும் சில காலம் முக்காலியில் அவர் அமர்ந்திருக்க வேண்டியது காலத்தின் நியதி. அதற்குள் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு அவரால் எவ்வாறு தீர்வு காண முடியும்?

இந்தியாவின் தமிழக மாநில தேர் தல் ஒன்றின் மூலம் ஆட்சி மாற் றம் ஏற்படுகிறது என்றால், ஈழத்தேசி யத்தை பொறுத்தளவில் இது ஒரு நிலை மாறு காலம் என்று அர்த்தம்.

1983 யூலை மாத தமிழின அழிப்பை திட்டமிட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு அதனை வெவ்வேறு வழிகளால் மேற்கொண்டவாறு செயற்படுத்தியதையும், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலான தமிழக மாநில தேர்தல் முடிவுகளையும் அது தொடர்பான நிகழ்வுகளையும் எடுத்துப் பார்க்கின் இதன் உண்மை புரியும்.

தமிழகத்தில் திராவிட ஆட்சியென்பது 1967ல் சி.என்.அண்ணாத்துரையால் (அறிஞர் அண்ணா) ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்ராஸ் என்றிருந்த இந்த மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு அல்லது தமிழகம் என்று மாற்றிய இவர் 1969ல் மறைந்தார். எனினும் குறுகிய காலத்தில் மாநிலத்தின் பெயரை தமிழுக்கு மாற்றியது, தமிழ் மொழிக்கு அரச நிர்வாகத்திலும் கல்வித்துறையிலும் வழங்கிய உரிமை, சமூக நீதி மற்றும் மருத்துவம் போன்றவற்றில் காட்டிய அக்கறை, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வழங்கிய முன்னுரிமை ஆகியவைகளால் இங்கு தமிழ்க் கட்சி ஒன்றின் தலைமையில் நிர்வாகம் இருப்பதாக பலர் மனதிலும் படம் காட்டப்பட்டது.

இதற்கான அடிப்படை இலங்கையின் தமிழ் மக்கள் மீதான எந்தவொரு வன்முறை இடம்பெற்றாலும் அல்லது உரிமை மறுப்பு இடம்பெற்றாலும் தமிழகத்திலிருந்து முதல் குரல் ஒலிப்பதுவே. பின்னர் முதலமைச்சர்களாக வந்த மு.கருணாநிதி, எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெயலலிதா, எடப்பாடி, ஸ்ராலின் போன்றவர்களும் திராவிட கட்சிகளை சார்ந்தவர்களாக இருந்த வேளையில் அதனை மறைக்கும் அரசியல் தடுப்புகளை கச்சிதமாக மேற்கொண்டிருந்தனர். இவர்களுள் சிலர் அவ்வப்போது ஈழத்தமிழரை பகடைக்காய்களாக பயன்படுத்தியதும் உண்டு. இதில் கலைஞர் கருணாநிதியின் முள்ளிவாய்க்கால் கால உண்ணாவிரதம்(?) உலகப்பிரசித்தி பெற்றது.

1989 இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ராஜீவ்காந்தி புதுடில்லி திரும்பும் வழியில் மரினா கடற்கரையில், தமது ஒப்பந்த வெற்றியை பகிரங்கப்படுத்தும் நோக்கோடு மாபெரும் கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுமாறு அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனிடம் வேண்டினார். ஒப்பந்தத்தில் உண்மையான தாற்பரியத்தை உணர்ந்த எம்.ஜி.ஆர். அதற்கு ஆதரவாக இருக்கவில்லை. வேண்டுகோள் நிராகரிக்கப்படுமானால் தமிழக ஆட்சிக் கவிழ்ப்பைக் காட்டி பயமுறுத்தியே ராஜீவ்காந்தி எம்.ஜி.ஆர். ஊடாக அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்வித்து உரையாற்றினார் என்பது பகிரங்க ரகசியம்.

ஜெயலலிதா ஆட்சிக் காலம் முதல் ஸ்ராலின் காலம் வரையான அரசியல் வழித்தடம் ஈழத்தமிழரை அகதிகளாக மட்டுமன்றி அநாதைகளாகவும் ஆக்கியது.

இந்தப் பின்னணியை மையமாக வைத்து தமிழக தேர்தல் முடிவை ஈழத்தமிழருக்கான நிலைமாறு காலமாக ஏன் பார்க்கப்படுகிறது என்று ஆராயலாம். தமிழ் நாட்டில் யார் ஆட்சிக்கு வந்தாலும் தொப்புள்கொடி உறவு என்ற ஒரு வாசகம் ஈழத்தமிழரை கட்டிப்போட்டுவிடும். அதுவே தமிழக ஆட்சிபீடத்துக்கு எப்போதும் வாய்ப்பான ஒரு காலமாகிவிடும்.

ஜோசெப் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் 2024 பெப்ரவரியில் உருவானது. இரண்டு ஆண்டுகளும் மூன்று மாதங்களையும் மட்டுமே தனது வயதாகக் கொண்ட இக்கட்சி கடந்த மே மாதம் 10ம் திகதி ஆட்சியை கைப்பற்றியது. இந்த வரலாற்றை ஈழத்தமிழரின் அரசியல் தேவைகளையும், அபிலாசைகளையும் நிறைவேற்றும் காலமாக்கலாமென ஈழத்தேசிய அரசியல்வாதிகள் சிலர் பார்க்கின்றனர். இதற்காகவே அண்மைய தமிழக பயணங்கள் அமைகின்றன.

ஆரம்பத்தில் அநேகமாக தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழகத்தின் புதிய அரசுக்கு வாழ்த்துத் தெரிவிக்கையில் ஈழத்தமிழரின் எதிர்பார்ப்புகளை சுட்டிக்காட்டுவது வழக்கம். அதுவே இப்போதும் தொடர்கிறது. தமிழரசுக் கட்சியின் தலைவராக உட்கட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவரும், இக்கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் திடுதிப்பென தமிழகத்தில் தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பினை சந்திக்கும் படங்களை பார்த்தபோது, இது இவ்வாறுதான் இடம்பெறுமென இந்தப் பத்தியில் அதற்கு முன்னர் குறிப்பிட்டது ஞாபகம் இருக்கிறது.

இந்த வரிசையில் இப்போது தமிழ் அரசியல் பிரமுகர்கள் அணியொன்று தமிழகம் சென்று தமிழக முதல்வர் ஜோசெப் விஜயை சந்தித்து தங்களின் கோரிக்கை ஆவணம் ஒன்றை கையளித்த படம் ஊடகங்களில் வந்துள்ளது. சந்தித்த இந்தக் குழுவின் பெயர் தமிழ்த் தேசிய பேரவை. ஒரு காலத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக எவ்வாறு தமிழரசுக் கட்சி இருந்ததோ, அதேபோன்று தமிழ்த் தேசிய பேரவையின் தலைமை அகில இலங்கை காங்கிரஸிடம் வந்துள்ளது. இதனால் இப்பேரவையின் தலைவராக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமைந்துள்ளார். இவர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவகரான ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரனார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழருக்கான அரசியல் தீர்வே இக்குழுவினரின் சந்திப்பின் பிரதான நோக்கு. ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டு தமிழ்த் தேசிய இறைமையை அங்கீகரிக்கும் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை தங்கள் கோரிக்கையாக இப்பேரவை தமிழக முதல்வரிடம் கையளித்துள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை அமைச்சர் ஒருவர், சட்டவாளர்கள் மூவர் என எண்மரை உள்ளடக்கியது இக்குழு.

ஈழத்தமிழ்த் தேசிய அரசியலில் தொடர் நிகழ்வுகள் இடம்பெறுமென்று விடயம் அறிந்தவர்கள் கூறுகின்றனர். இந்திய ஆட்சித் தரப்பையே நம்பியிருந்த - இன்றும் நம்பியிருக்கும் தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரின் ஜனநாயக தமிழர் கூட்டணியும் விரைவில் தமிழகம் செல்லவிருப்பதாக தெரிய வருகிறது. இதற்கப்பால் மேலும் சில சொரியல் அமைப்புகளும், அரசியல் ரீதியாக குழுக்களும் கூட தமிழக பயணத்துக்கு திட்டமிட்டு வருகின்றன.

தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றிருக்கும் ஜோசெப் விஜய்க்கு திராவிட முன்னேற்றக் கழக தலைவர் ஸ்ராலின் ஏற்கனவே ஆறு மாத அவகாசம் கொடுத்துள்ளார். கடந்த தேர்தலில் சொந்தத் தொகுதியில் தோல்விகண்ட ஸ்ராலின் அடுத்த ஆறு மாதங்களுக்கு புதிய முதல்வரின் ஆட்சிக்கு தாங்கள் தொந்தரவு கொடுக்கப் போவதில்லையென கூறியுள்ளார். அப்படியாயின் அதன் பின்னர், யார் யாருடன் பதவிமோகத்தில் கூட்டுச் சேர்ந்து என்ன கூத்து நடத்தப் போகிறார்கள் என்பதை எவராலும் சொல்ல முடியாது.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் தமிழர் மீதான அட்டூழியங்களை சிங்கள தேசம் மேற்கொண்ட ஒவ்வொரு வேளையிலும் இந்தியாவிலிருந்தே முதல் குரல் வரும். இந்திரா காந்தி, நரசிம்மராவ், ஜி.பார்த்தசாரதி, ரமேஸ் பண்டாரி, வெங்கடேஸ்வரன், டிக்சித், கர்டிப்சிங் பூரி (இவர் தற்போது மோடியின் அமைச்சரவையில் ஒருவராக இருக்கிறார்) என்று சுமார் நாற்பதுக்கும் அதிகமான முக்கியஸ்தர்கள் சவுத் புளொக் என்ற மத்திய அரசின் செயற்பாட்டு பிரிவில் இருந்தனர். இன்று மோடியின் அரசில் வெளிவிவகார அமைச்சராகவிருக்கும் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் மட்டுமே இலங்கை விவகாரங்களை கையாண்டு வருகிறார். தமிழக முதலமைச்சர் இலங்கைத் தமிழர் விடயத்தில் ஏதாவது செய்ய வேண்டுமானால் அதற்கான பாதை ஜெய்சங்கர் ஊடாக மட்டுமே என்பதை மறந்துவிட முடியாது.

அரசியல் நிலைமாறு காலத்தை தமிழக முதலமைச்சரும் ஈழத்தமிழ் அரசியல் கட்சிகளும் எவ்வாறு கையாளப் போகின்றனர்? கடந்த காலங்களில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளை ஜெய்சங்கர் எவ்வாறு கையாண்டார் என்பதை இங்கு சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

இப்போது தமிழக முதல்வர் ஜோசெப் விஜயிடம் ஈழத்தமிழர்கள் கையளிக்க ஆரம்பித்திருக்கும் ஆவணங்கள் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையா? இனிமேல் அவரை நோக்கி செல்லவிருக்கும் ஆவணங்கள் முறைப்பாடுகளின் புகாராக இருக்குமா? சிந்தித்து செயற்பட வேண்டிய ஆழமான பொறுப்பு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளிடம் உள்ளது என்பதை மறந்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# தமிழ் நாட்டால் என்ன செய்ய முடியும்?



-யதீந்திரா

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி), தமிழ்த் தேசியப் பேரவை என்னும் பெயரில், தமிழ் நாடு முதலமைச்சர் ஜோசப் விஜயை சந்தித்து, உதவி கோரியிருக்கின்றனர். ஈழத் தமிழ் மக்கள் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைவதற்கு தமிழ் நாடு உதவ வேண்டும் என்பதுதான் கோரிக்கை. இதற்கு முன்னர் முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை சந்தித்த போதும், இதே போன்றதொரு கோரிக்கையையே முன்வைத்திருந்தனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன்தான், இந்த சந்திப்புக்களுக்கான தரகராக தொழிற்படுகிறார்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் அரசாங்கத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அங்கம் வகிக்கும் நிலையில், அதனைப் பயன்படுத்தி விஜயுடனான சந்திப்பை திருமாவளவன் ஏற்பாடு செய்திருக்கின்றார். தனது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் ஒரு கட்சியின் வேண்டுகோள் என்னும் அடிப்படையில்தான் விஜயும் சந்திப்பிற்கு இணங்கியிருக்கின்றார் என்பதை புரிந்து கொள்வது கடினமானதல்ல. ஈழத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அரசியல் கட்சி என்னும் வகையில் இவ்வாறான சந்திப்புக்களை மேற்கொள்வது அடிப்படையில் ஒரு சாதாரண அரசியல் செயற்பாடு. இதற்கப்பால் இதன் அரசியல் பெறுமதியை எவ்வாறு மதிப்பிடுவது என்பதில்தான், இந்தக் கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஈழ அரசியலை தீர்மானித்த காலத்தில், தமிழ் நாடு ஒரு முக்கிய அரசியல் தளமாக இருந்தது. தமிழ் நாட்டு அரசியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு முதலீடு செய்திருந்தது. அந்த முதலீட்டின் விளைவுதான் இப்போதும் சில அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகள் ஆதரவு நிலைப்பாட்டை உச்சரித்துவருகின்றனர். தமிழ் நாட்டின் ஈழ ஆதரவு நிலைப்பாட்டை அன்றிருந்த அரசியல் சூழலோடு ஒப்பிட்டு நோக்க வேண்டும். அப்படி நோக்காவிட்டால் - அதன் பின்னணியை அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். தமிழ் நாட்டின் அன்றைய ஆதரவு நிலைப்பாட்டுக்கு பின்னால் தமிழ் உணர்வு (தொப்புள் கொடிக் கதை சார்ந்த) என்பதை விடவும், இந்தியாவின் நேரடியான தலையீடுதான், தமிழ் நாட்டின் அன்றைய ஈழ ஆதரவில் பெரும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

தமிழ் நாட்டை ஈழ ஆயுத அமைப்புக்கள் ஒரு பின்தளமாக பயன்படுத்துவதை அன்றைய இந்தியா அனுமதித்திருந்தது. இதன் காரணமாகத்தான் தமிழ் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஈழ ஆயுத அமைப்புக்களுக்கு தாராளமாக உதவினர். இயக்கங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கான பயற்சி முகாம்களை வெளிப்படையாக நடத்தினர். மத்திய அரசின் தடை இருந்திருக்குமாயின் அதனை அவர்கள் செய்திருக்க முடியாது. எனவே அன்றைய தமிழ் நாட்டின் ஈடுபாட்டை, அன்றைய இந்திய மத்திய அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாட்டோடு இணைத்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை இப்போது உங்களால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியுமல்லவா! ஆனால் இந்த நிலைமை ராஜீவ் கொலையுடன் முற்றுப்பெற்றது. அதன் பின்னர் தமிழ் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஈழ ஆதரவை உதட்டளவு விடயமாக்கிக் கொண்டார்கள் என்பதே உண்மை. பெருமளவிற்கு தமிழ் உணர்வு என்னும் விடயமாகவே நோக்கப்பட்டது.

இலங்கை தமிழ் விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையீடு செய்த போது, அப்போது இந்திராகாந்தி கூறிய விடயம் பிரபலமானது. அதாவது, ஆறு கோடித் தமிழ் மக்களை கொண்டிருக்கும் இந்தியா, அருகிலிருக்கும் நாட்டில், தமிழ் மக்கள் துன்பப்படும் போது, அதனை பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க முடியாது. இந்த அடிப்படையில்தான் அன்றைய தலையீட்டுக்கான நியாயம் முன்வைக்கப்பட்டது. ஆனால் இறுதி யுத்தத்தின் போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில், முள்ளிவாய்க்காலில் முடங்கியிருந்த போதும், இருபது கிலோமீற்றல் தூரத்தில் இருந்த தமிழ் நாட்டால் எதுவும் செய்ய இயலவில்லை. எல்லாம் கண்களுக்கு முன்னாலேயே நடந்து முடிந்தது. அப்போது இரண்டு பிரதான கட்சிகளும் சத்தங்களை போட்டன, கூட்டங்களை நடத்தின, உண்ணாவிரதம் என்னும் காட்சிகள் இடம்பெற்றன என்பதெல்லாம் உண்மைதான், ஆனால் அவற்றால் யுத்தத்தை நிறுத்த முடிந்ததா? மக்களை காப்பாற்ற முடிந்ததா? பேரழிவு ஒன்றை தடுக்க முடிந்ததா? இல்லையே! ஏன்? ஏனென்றால் பதில் மிகவும் சுலபமானது. இந்திய மத்திய அரசாங்கம் தலையீடு செய்யவில்லை. மத்தியின் தலையீடு இருந்திருந்தால், தமிழ் நாட்டின் தலையீடு ஆக்கபூர்வமானதாக இருந்திருக்கும். இந்த இடத்தில்தான் மத்திய அரசின் தலையீடு இல்லாமல், தமிழ் நாடு என்பது எந்தளவிற்கு அரசியல் பெறுமதியற்றதாக இருக்கின்றது என்பதை ஒருவர் புரிந்து கொள்ளவது இலகுவாகின்றது. மத்தியின் தலையீட்டின் நிழலில்தான், தமிழ் நாடும் அதன் முழுமையான ஈடுபாட்டை காண்பிக்க முடியும் - இல்லாவிட்டால் பெருமளவிற்கு பார்வையாளர்தான். இதனால்தான் இறுதி யுத்தத்தின் போது, தமிழ் நாடு வெறும் பார்வையாளராக மட்டுமே இருந்தது.

இதனை சரிவரப் புரிந்து கொண்டால் மட்டும்தான், தமிழ் நாட்டு அரசியல்வாதிகளிடம் மகஜர் கொடுப்பதன் மூலம் எதுவரையில் செல்ல முடியும் என்பதை புரிந்துகொள்ள முடியும். அவ்வாறானதொரு புரிதலோடு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினர் சென்றிருக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் நாங்கள் ஈழத்தில் தமிழ் மக்களின் பிரதான அரசியல் குரல், நாங்கள் மட்டும்தான் உண்மையான பிரதிநிதிகள் என்பதை சொல்ல வேண்டும் என்னும் அவாவே அவர்களை ஆட்கொண்டிருக்கின்றது.

இன்று தமிழ் நாட்டு முதலமைச்சரை சந்திப்பதற்கான இடைத் தரகராக தொழிற்படும் தொல் திருமாவளவன், யுத்தத்திற்கு பின்னர், கருணாநிதியின் மகள் கணிமொழியின் தலைமையில் இலங்கை வந்த குழுவிலும் இடம்பெற்றிருந்தார். இந்தக் குழுவினர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை (இனப்படுகொலையாளி என்னும் குற்றச்சாட்டுக்குரியவர்) சந்தித்து பேசியிருந்தனர். அப்போது, திருமாவளவனின் தோளில் தட்டி, நீங்கள் பிரபாகரனின் நண்பர் தானே, இங்கிருந்திருந்தால், நீங்களும் பிரபாகரன் போன்று போயிருப்பீர்கள் என்று மகிந்த கூறியது போது, அனைவரும் புன்னகையில் ஒன்றிணைந்தனர். அதே திருமாவளவன்தான் இப்போது ஈழக் கோரிக்கையை வெற்றிகொள்வதற்கான தூதுவராகத் தொழிற்படுகின்றார்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி குறுக்கிடலாம் - அப்படியென்றால், நீங்கள் தமிழ் நாட்டுத் தலைவர்களை சந்தித்து பேசக் கூடாது என்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. உரையாடுவதில் பிரச்சினையில்லை. உறவுகளை ஏற்படுத்துவதில் தவறில்லை - ஏற்படுத்தத்தான் வேண்டும் ஆனால் நாங்கள் என்ன கேட்கின்றோம் - அவர்களால் என்ன செய்ய முடியும் என்பதில் தெளிவான பார்வையுடன் பேச வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்த போது, ஆயுதப் போராட்டத்திற்கான பின்தளமாக தமிழ் நாட்டை பயன்படுத்தியது. தமிழ் நாட்டை இனியும் பயன்படுத்த முடியாது என்னும் நிலையில்தான் புலம்பெயர் நாடுகளை நோக்கித் திரும்பினர். இப்போது அந்த விடயங்களுக்குள் அதிகம் செல்லுவது பயனற்றது. ஆனால் போர்த் தோல்விக்கு பின்னர், ஈழ அரசியல் மீளவும் ஜனநாயகப் பாதையை நோக்கித் திரும்பிவிட்டது. இந்த நிலையில் தமிழ் நாட்டின் தலையீடு எப்படியிருக்க வேண்டும்? எப்படியிருந்தால் அது ஈழத் தமிழர்களுக்கு நல்லது - சாதகமானது? இந்த அடிப்படையில்தான் சிந்திக்க வேண்டும், செயலாற்ற வேண்டும்.

இந்த இடத்தில் இந்தக் கட்டுரையாளர் உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கும் கேள்வி - தமிழ் நாட்டு முதலமைச்சரிடம் சமஸ்டியை பெறுவதற்கு உதவுங்கள் என்று கோரினால், அவரால் எவ்வாறு உதவ முடியும்? இலங்கையில் சமஸ்டித் தீர்வை அடைய வேண்டும் என்றால், அதற்கு வெளியிலிருக்கும் எவராலும் உதவவே முடியாது. ஏன் அப்படி? ஏனென்றால், இலங்கையில் சமஸ்டித் தீர்வை அடைய வேண்டுமாயின், அதற்கு சிங்கள மக்களின் இணக்கப்பாடுதான் தேவையே தவிர, தமிழ் நாட்டினதோ ஏன் இந்தியாவினதோ கூட இல்லை. உதாரணமாக இந்தியா சமஸ்டி என்று கூறுகின்றது என்று வைத்துக் கொள்வோம், அதனை எவ்வாறு சிங்கள மக்களின் ஆதரவின்றி இந்தியாவினால் ஏற்படுத்த முடியும்? இந்தியாவினாலேயே செய்ய முடியாத ஒன்றை எவ்வாறு தமிழ் நாட்டினால் செய்ய முடியும்? ஒரு நாட்டை உடைத்து, புதியதொரு நாட்டை உருவாக்குவதற்கான ஆதரவை அல்லது ஒத்துழைப்பை வேண்டுமானால், பிறிதொரு நாடு, அதன் நலன்களுக்காக செய்ய முடியும்? உதாரணமாக கிழக்கு பாக்கிஸ்தானை இந்தியா உடைத்தமையை எடுத்து நோக்கலாம் ஆனால் ஒரு நாட்டுக்குள், ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டுமானால் அதனை வேறு எவருமே, இறக்குமதி செய்ய முடியாது, அந்த நாட்டுக்குள்தான் அதற்கான இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் - அவ்வாறானதொரு இணக்கப்பாட்டுக்கான ஆதரவாளராக அல்லது அணுசனையாளராக பிறிதொரு நாடு இருக்க முடியும்.

இப்போது தமிழ் நாட்டின் அரசியல் குரல் எவ்வாறிருக்க வேண்டும் என்று கேட்டால் - அது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில், இந்திய மத்திய அரசாங்கத்திற்கு - அதாவது இந்திய தேசத்திற்குள்ள கடப்பாட்டை சுட்டிக்காட்டுவதாக, அதில் தலையீடு செய்யக் கோருவதாக இருக்க முடியும். 1987 - இந்திய - இலங்கை ஒப்பந்தமானது, இலங்கையில் அமைதியை ஏற்படுத்தி, அனைவரது இணக்கப்பாட்டுடனும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தையே கொண்டிருந்தது. ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்காகவே இந்தியப் படைகள் அனுப்பப்பட்டன. ஆனால் அந்த ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபையை திறம்பட இயங்குவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டிய, முழுமையான அதிகாரமுள்ள சபையாக இயங்குவதற்கான அரசியல் சூழலை இன்றுவரையில் ஏற்படுத்த முடியவில்லை. இதில் தமிழ் அரசியல் தரப்புக்களின் தவறுகள் செல்வாக்குச் செலுத்திருந்தது உண்மையாயினும் கூட, தமிழ் மக்களின் நன்மையை கருத்தில் கொண்டு, தலையீடு செய்ய வேண்டிய கடப்பாடு புதுடில்லிக்கு உண்டு என்பதை தமிழ் நாடு வலியுறுத்த முடியும். தமிழ் நாட்டு அரசியல் தரப்புக்களிடம் ஈழ அரசியல்வாதிகள் முன்வைக்க வேண்டிய கோரிக்கை இந்த அடிப்படையில்தான் இருக்க வேண்டும். இதற்கு மாறாக, போக முடியாத ஊருக்கு வழி சொல்லுங்கள் என்பதாகப் பேசுவதும், செயற்படுவதும் - அதற்கு அவர்களும் ஒரு சம்பிராயத்திற்காக தலையாட்டுவதும் பயனற்றது. தமிழ் நாட்டு அரசியல் தலைமைகளால், ஈழத் தமிழர் சார்பில் பேசக் கூடிய ஒரேயொரு விடயம் இருக்கின்றது என்றால், அது இந்திய- இலங்கை ஒப்பந்தம் தொடர்பானது மட்டும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியலாகிய சுப்பிரமணியம்



நிலாந்தன்



**ஊரில் உள்ள எல்லாத் தெருநாய்களிலும் சுப்பிரமணியன்களை காண்பது தான் உண்மையான இந்து அறம். சுப்பிரமணியன்களைப் போற்றுவது, கொண்டாடுவது என்பதுமுதலில், வடக்குக் கிழக்கில் நாய்களைப் பராமரிப்பதற்கான ஒரு நிலையத்தை உருவாக்குவதுதான். தமிழ்த் அரசியல் நோக்கு நிலையில் அது தேசத்தைக் கட்டி எழுப்பத் தேவையான கட்டமைப்புகளில் ஒன்று தான்.**

அண்மை மாதங்களாக சமூக ஊடக வலைத்தளச் சூழலில் அதிகம் வைரலாகிய விலங்குகள் நான்கு. முதலா வது ஓர் எருமை. பங்களாதேஷில் ஒரு பண்ணையில் பிறந்தது.மிக அரிதான வகை எருமைகளில் ஒன்று. அதனுடைய இளஞ் சிவப்பு நிறமும், அதனுடைய கொம் புகளுக்கிடையிலான திரண்டமுடியும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை ஞாபகப்படுத்தின. அதனால் பண்ணை உரிமையாளரின் தம்பி அதற்கு டிரம்ப் என்று பெயரைவைத்தார். அது வைரல் ஆகியது. அது மத நம்பிக்கையோடு பலி யிடப்படுவதற்காக வளர்க்கப்பட்ட ஓர் எருமை. எனினும், வைரல் ஆகியதால், பலியிடப்படுவதிலிருந்து காப்பாற்றப் பட்டது. பங்களாதேஷ் அரசாங்கம் அதனை பொறுப்பெடுத்தது. இப்பொ ழுது அங்குள்ள மிருகக்காட்சிசாலை ஒன் றில் அது அரச விருந்தினராகப் பராமரிக் கப்படுகிறது. எருமைக்கு வந்தவாழ்வு.

இரண்டாவது ஒரு நாய். அது இந்தி யாவில் பிறந்தது. தெருநாயாக இருந்த அதனை அங்கே சமாதானத்துக்கான பாத யாத்திரைக்கு வந்த அமெரிக்க பௌத்த மதகுருக்கள் அரவணைத்தனர். அது பின் னர் அவர்களுடைய சமாதானத்துக்கான பாதயாத்திரையின் செல்லப் பிராணியாக மாறியது. உலகம் பூராகவும் வைரல் ஆகி யது. அண்மையில் அது இலங்கைக்கு வந்தது. மனிதர்களுக்கும் மிருகங்களுக் கும் இடையிலான அன்பின் குறியீடாக அது கருதப்படுகிறது. அதன் பெயர் லோகா. லோகா என்றால் ஒளி என்று பொருள். சமாதானத்துக்காக பாதயாத்திரை வரும் பௌத்த சன்னியாசிகளின் புகழைவிட வும் லோகாவுக்கு புகழ் அதிகம்.

மூன்றாவது விலங்குசுப்பிரமணியன். அதுவும் ஒருநாய். கதிர்காமத்துக்கு நடந் துபோன பாத யாத்திரிகர்களோடு அந்த நாய் முள்ளியவளையில் இணைந்து கொண்டது.ஈழத் தமிழர்கள் மத்தியில் இப்பொழுது அது வைரலாகி வருகிறது.

நாலாவது ஜீவ ராசி ஒரு முள்ளம் பன்றி. ஒரு சிங்களச் சிறுமியின் செல்லப் பிராணி. சிறுமிக்கும் அந்த முள்ளம் பன் றிக்கும் இடையிலான சினேகிதம் சமூக ஊடக வலைத்தளச் சூழலில் அதிகம் வைரல் ஆகியது.

சமூக ஊடக வலைத்தளச் சூழலில் மனிதர்கள் மட்டுமல்ல மனிதர்களால் நேசிக்கப்படுகின்ற, மனிதர்களை நேசிக் கின்ற விலங்குகளும் வைரல் ஆகமுடியும் என்பதற்கு இவை ஆகப்பிந்திய உதார ணங்கள்.இன்று இக்கட்டுரை மேற்சொன்ன இரண்டு நாய்களையும் பற்றியது. முதலா வது லோகா. இரண்டாவது சுப்பிரமணி யம்.

லோகா இலங்கைக்கு வரும்பொழுது அரசவிருந்தினராகத்தான் வந்தது. சமா தானத்தின் தூதுவராக அதற்கு ராஜா மரி யாதையும் போஷிப்பும் கிடைத்தன. பிக் குகள் நடந்துசென்ற வழி நெடுக, லோகா விருப்பத்தோடு அரவணைக்கப்பட்டது.

அதனை ஏனைய தெருநாய்களில் இருந்து பாதுகாக்கும் பொறுப்பை இலங் கைப் படையினர் ஏற்றுக்கொண்டார் கள். அது ஒரு விமர்சனமாகவும் வெளி வந்தது. எந்தப் படையினர் யுத்தகாலங்க ளில் தமிழ் முஸ்லிம் மக்களை நாயைவி டக் கேவலமாக நடத்தினார்களோ, அதே படையைச் சேர்ந்தவர்கள் ஒரு நாய்க்கு அவ்வளவு பாதுகாப்பு கொடுப்பதில் ஓர் அக முரண் உண்டு.

ஆனால் நமது சுப்பிரமணியத்துக்கு அப்படியெல்லாம் ராஜபோகம் கிடைக் கவில்லை. ராஜ மரியாதையும் இல்லை. அதனால்தான் கல்முனையில் அதை ஒரு வர் உதைந்தார். அந்த உதைதான் சுப்பிர மணியத்தை பேசுபொருள் ஆக்கியது. சுப்பிரமணியத்தை உதைத்தவர் ஒரு முஸ் லீம். பின்னர் அதற்காக மன்னிப்புக் கேட் டார். அவருக்கு எதிராக போலீசார் சட்ட நடவடிக்கையும் எடுத்தார்கள்.

சுப்பிரமணியத்தில் தொடங்கியமோ தல் அடுத்த கட்டமாக சிவலிங்கத்தை வந்தடைந்தது. சிவலிங்கத்தின் மீதுவெ றுப்பைக் கொட்டும் முஸ்லீம் ஒருவரு டைய பதிவுக்கு எதிராக சவுதியில் வசிக் கும் தமிழ் இந்து ஒருவர் பதிவொன்றைப் போட்டார். இறைதூதர் முகமதுநபிகளை அவமதிக்கும் அந்தப் பதிவுக்காக பின்னர் அவரும் மன்னிப்புக் கேட்டார். இப்பொ ழுது அவர் சவுதியின் சட்டநடவடிக்கை களுக்கு உட்பட்டிருக்கிறார்.

அங்கிருந்து தொடங்கி சமூகவலைத் தள வெறுப்பர்கள் ஒருவர் மற்றவரின் மீது வெறுப்பைக் கக்கிகொண்டிருக்கிறார்கள். முதல் தவறு யாருடையது என்பதல்ல இங் குபிரச்சனை. ஆதை வைத்து தொடர்ந்து தவறுகளைச் செய்வது யார் என்பதுதான் இங்கு பிரச்சனை. இப்பொழுது சமூக ஊடக வலைத்தள வெறுப்பவர்கள் விவ காரத்தை கையில் எடுத்துக்கொண்டு விட்டார்கள். அவர்கள் சுப்பிரமணி யத்தை தத்தெடுக்க முயற்சிக்கிறார்கள். சுப்பிரமணியன் வெறுப்பவர்களின் கரு வியாக பயன்படுத்தப்படுவதற்கு பாத யாத்திரிகர்கள் இடம் கொடுக்கக்கூடாது.

பாதயாத்திரை எனப்படுவது பக்தர்க ளைப் பொறுத்தவரை மிகக்கடினமான விரதங்களில் ஒன்று. பாதயாத்திரையின் நோக்கமே தன்னை வருத்தி, மனதை ஒரு நிலைப்படுத்தி, இறைவனை நெருங்குவது. அது அன்பின் பாதை. ஆன்மீக ஒடுக்கத் தின் பாதை. வெறுப்பின் பாதையல்ல.

சுப்பிரமணியம் இப்பொழுது ஒரு பாதயாத்ரிகன். அது ஒரு வாயில்லாத ஜீவன். தன்னைச் சுற்றிநடக்கும் அரசியல் அதற்கு விளங்காது. ஆனால் சுப்பிரமணி யத்தை கொண்டாடுபவர்களுக்கு அது விளங்கும். சுப்பிரமணியத்தை வைத்து மதங்களுக்கு இடையிலான முரண்பாடு களை ஊக்குவிப்பது பாதயாத்திரியின் உன்னதமான நோக்கங்களுக்கு எதிரானது லோகா சமாதானத்துக்காக நடந்தது சுப் பிரமணியம் முரண்பாடுகளை பெருப்பிப் பதற்கு நடந்தது என்று விமர்சிக்கப்படும் ஒரு நிலையை பாதயாத்ரிகர்கள் அனும திக்கக்கூடாது. இந்துக்கள் அனுமதிக்கக் கூடாது.

கதிர்காமம் எனப்படுவது தமிழ் மக்க ளுடைய தாயகச் சூழலுக்கு வெளியே காணப்படுகின்ற அதனாலேயே அதிகம் சிங்களபௌத்த மயப்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்ற ஒரு முருகன் ஆலயம் ஆகும். அதே சமயம் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன் றாக வழிபடும் ஓர் ஆலயம் என்ற பெருமை அதற்கு உண்டு. அப்படிக் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய சில யாத்திரிகைத் தலங் கள்தான் இலங்கைத்தீவில் உண்டு. கதிர் காமம், சிவனொளிபாதமலை, மடுமாதா தேவாலயம் போன்ற சிலயாத்திரிகைத் தலங்கள்தான்.

கதிர்காமத்துக்கான பாதயாத்திரை நூற்றாண்டுகாலப் பாரம்பரியத்தைக் கொண்டது. மூன்று மாகாணங்களையும் ஏழு மாவட்டங்களையும் ஊடறுத்துச் செல்வது. இலங்கைத் தீவின் மிக நீண்ட பாதயாத்திரை அது. அதன் நூற்றாண்டு கால மகிமையை மதமுரண்பாடுகள் கெடுக்க அனுமதிக்கக்கூடாது.

சுப்பிரமணியத்தை தத்தெடுக்க முற்ப டும் ஒவ்வொருவரிடமும் இக்கட்டுரை ஒரு கேள்வியை முன்வைக்கின்றது. சுப்பி ரமணியத்தை நீங்கள் மெய்யாகவே விசு வாசமாக நேசிக்கிறீர்களா? அப்படியென் றால் வாருங்கள், எமது தெருக்களில் எத் தனை சுப்பிரமணியன்கள் கட்டாக்காலி களாக விடப்பட்டிருக்கிறார்கள் என்ப தைப் பாருங்கள். என்னுடைய வீட்டுக்கு முன்னரும் இரண்டு சுப்பிரமணியங்கள் தினசரி வந்து கழித்துவிட்டுப் போவார் கள். என்னைப் போல பலர் திடீரென்று தெருக்களைக் குறுகுறுத்து ஓடும் சுப்பிர மணியங்களால் விபத்துக்கு உள்ளாகியி ருக்கிறார்கள் உயிரிழந்திருக்கிறார்கள் படு காயப்பட்டிருக்கிறார்கள் சுப்பிரமணியங் களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

கட்டாக்காலிகளாக அலையும் சுப்பி ரமணியன்களைக் காப்பாற்றுவதற்காக சிவபூமி அறக்கட்டளையானது யாழ். தென்மராட்சியில் ஓர் காப்பகத்தை உரு வாக்கியது. ஆனால் அதற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. முகநூல் கட் டைப் பஞ்சாயத்துக்கள் அந்தக் காப்ப கத்தை விமர்சித்தே மூட வைத்துவிட்டார் கள். இப்பொழுது வடக்கில் சுப்பிரமணி யங்களுக்கு காப்பகம் இல்லை. எல்லாச் சுப்பிரமணியன்களுக்கும் கதிர்காமத்துக் குப் போகும் பாக்கியமும் இல்லை.

கட்டாக்காலி நாய்களைக் கொல்லக் கூடாது என்றுஉத்தரவிட்டவர் மகிந்தரா ஜபக்ச. ஆனால் இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்கள் பூச்சிபுழுக்களைப் போல கொல்லப்பட்டதற்கு அவர் இதுவரை பொறுப்புக் கூறவில்லை.

சுப்பிரமணியன்களைப் பாதுகாப்ப தற்கு பொருத்தமான துறைசார் வளங்க ளோடு உருவாக்கப்பட்ட காப்பகம் எது வும் தமிழ்ப் பகுதிகளில் இல்லை. கிழக் கில் எனது நண்பரின் மனைவி-அவர் ஒரு வெளிநாட்டவர் - தெருக்களில் நாய்க்குட் டிகளைக் கண்டால் தனது சைக்கிள் முன் பாஸ்கட்டில் போட்டு, வீட்டுக்குக் கொண்டு வந்துவிடுவார். அவருடைய வீட்டுக்குநான் போகும்போது அந்தச் சூழல் முழுவதும் நாய்களின் வாடைவீ சும். அது துர்வாடையாகவும் இருக்கும். நண்பர் அண்மையில் சொன்னார், முன்ன ரைவிட இப்பொழுது நிலைமை பரவா யில்லை என்று. இப்பொழுது கட்டாக் காலிகளாக விடப்பட்ட சுப்பிரமணியங் களிடம் அன்புகாட்ட ஒரு மிருகவைத்தி யர் கிடைத்திருக்கிறார் என்றும், அவர் தெருக்களில் கண்டெடுக்கப்படுகின்ற குட்டைபிடித்த சுப்பிரமணியங்களுக்கு அன்போடு சிகிச்சை அளிக்கிறார் என்றும் சொன்னார்.

மனித குல வரலாற்றில் மனிதர்களு டைய முதலாவது வளர்ப்புப் பிராணி நாய்தான். நாய்களுக்கும் மனிதர்களுக் கும் இடையிலான உறவு 15,000-30,000 ஆண்டுகளுக்கு முந்தியது. மனிதர்கள் நதிக்கரைகளுக்கு வரமுன்னரே, வேட் டைக்காரர்களாக இருந்த காலத்திலேயே, சுப்பிரமணியன்கள் மனிதர்களுக்கு நெருக் கமாக இருந்துள்ளார்கள். சுப்பிரமணியன் கள் நன்றியுள்ளவை. விசுவாசமானவை. காவல் காப்பவை. மனிதர்களைப் புரிந்து கொள்ளக் கூடியவை. மனிதர்களுடைய படுக்கை அறைவரை வருமளவுக்கு அன் பானவை. இணக்கமானவை.

இந்துக்களின் மதநம்பிக்கைகளைப் பொருத்தவரை அதுவைரவரின் வாகனம். தாம் வணங்கும் கடவுளின் வாகனமாக காணப்படும் ஒரு விலங்கை தெருக்களில் அனாதைகளாக கைவிடுகிறார்கள். எனவே ஊரில் உள்ள எல்லாத் தெருநாய்களிலும் சுப்பிரமணியன்களை காண்பது தான் உண்மையான இந்து அறம். சுப்பிரமணி யன்களைப் போற்றுவது, கொண்டாடு வது என்பது முதலில், வடக்குக் கிழக்கில் நாய்களைப் பராமரிப்பதற்கான ஒரு நிலை யத்தை உருவாக்குவதுதான். தமிழ்த் அரசி யல் நோக்குநிலையில் அது தேசத்தைக் கட்டி எழுப்பத் தேவையான கட்டமைப் புகளில் ஒன்று தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கு தமிழ் தேசியப் பேரவையின் கோரிக்கை!

**தமிழக முதலமைச்சர் ஜேசப் விஜய் அவர்களை கடந்த வெள்ளியன்று தமிழ் தேசியப் பேரவையின் தூதுக்குழுவினர் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை கையளித்திருந்தனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அந்தக் குழு கையளித்த கோரிக்கை மனுவை அப்படியே இங்கே தருகின்றோம்.**

ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக, தமிழக அரசினதும் தமிழக மக்களதும் ஆதரவைப் பெறும் நோக்கில், ஈழத் தமிழ் அரசியல் தலைவர்கள் கடந்த காலங்களில் தமிழக அரசுடனும் தமிழக அரசியல் கட்சிகளுடனும் தமிழக மக்களுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களையும் தொடர்பாடல்களையும் மேற்கொண்டு வந்திருந்தார்கள். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஜனநாயக முயற்சிகளும் சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனை கொண்ட சிறிலங்காவின் ஆட்சியாளர்களால் உதாசீனம் செய்யப்பட்டு தமிழ் மக்கள் மீது ஆயுதப் போராட்டம் திணிக்கப்பட்ட நிலையில், தமிழ் மக்களது உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலை புலிகள் இயக்கமும் கூட தமிழகத்தின் அனைத்து தரப்பினருடனும் தொடர்புகளை பேணியிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக, கடந்த 18.12.2025 அன்று அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் அவர்களையும் நாம் சந்தித்து, ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாகவும், தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட அடிப்படை அரசியல் அபிலாசைகளை முற்றிலும் புறக்கணித்து சிறிலங்கா அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுவரும் புதிய அரசியலமைப்பின் ஆபத்துகள் குறித்தும், விரிவாக எடுத்துரைத்திருந்தோம்.

அந்தச் சந்திப்பினைத் தொடர்ந்து, 11.01.2026 அன்று தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் அவர்களால் இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம்,

சிறீலங்காவில் ஆட்சியிலுள்ள 'அனுரகுமார அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருந்த :ஏக்ய ராஜ்ய' (ஒற்றையாட்சி) அரசியலமைப்பின் ஆபத்துகள் குறித்து இந்திய ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்த்ததுடன், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1985ஆம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையுடன், திம்பு மகாநாட்டில் ஈழத்தமிழ்ப் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய அரசியல் யாப்பு அமைய வேண்டும் என்பதனைத் தமிழர் கோரி நிற்கின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

தற்போது - தாங்கள் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள நிலையில், தமிழகத்தின் வரலாற்று கடமையும் பொறுப்புமான, ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கும் தொடர்ச்சியான நிலைப்பாடு மேலும் வலுப்பெறும் என்ற உறுதியான நம்பிக்கையுடனேயே தங்களைச் சந்திக்க நாம் வந்துள்ளோம் என்பதுடன், இந்தக் கடிதத்தையும் தங்களிடம் சமர்ப்பிக்கின்றோம்.

ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றை தாங்கள் நன்கு அறிந்தவர். 1987ம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையில் இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சிறிலங்காத் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலே தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்ற விடயம் குறித்த ஒப்பந்தத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, குறித்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு அலகாகக் கொண்டு சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது கோட்பாட்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுமிருந்தது.

ஆனால், அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறிய சிறிலங்கா அரசு, 13 ஆவது திருத்தத்தையும் அதனூடாக மாகாணசபை முறைமை உருவாக்கத்தையும் ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குள் மேற்கொண்டதன் மூலம், இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்ட, ஈழத் தமிழர்களது அரசியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்ற கோட்பாட்டு வேணவாக்களை அடியோடு நிராகரித்தது. மிகவும் தந்திரமாக நிராகரிக்கும் நோக்கிலேயே சிறிலங்கா அரசினால் ஒற்றையாட்சிக்குட்பட்டதாக குறித்த மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது.

13ம் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை சிறிலங்காவின் இறுக்கமான ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமையினால் மாகாண சபைகளுக்கு எந்தவொரு அதிகாரமும் பகிர்ந்தளிக்கப்பட முடியாதென்றும் - அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசின் முழுமையான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதென்றும் சிறிலங்காவின் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**குறித்த தீர்ப்பின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதியின் சுருக்கம் கீழ்வருமாறு:**

'சமஸ்டி ஆட்சி' என்ற சொற்பதத்திற்கு எதிர்மறையாகவே அரசியலமைப்பின் 2-வது உறுப்புரையில் 'ஒற்றை ஆட்சி' என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமஸ்டி ஆட்சி என்பது, அரைகுறை-சுயாட்சி அதிகாரம் கொண்ட அலகுகள் ஒன்றிணைந்து, மத்திக்கும் அந்த அரைகுறை சுயாட்சி அலகுகளுக்கும் இடையில் இறைமை அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கும் அமைப்பைக் குறிக்கும்.

ஒற்றை ஆட்சி அரசு ஒன்றில் தேசிய அரசாங்கமே சட்டரீதியாக மற்ற அனைத்து அதிகாரமட்டங்களையும் விட மேலான உச்ச அதிகாரத்தைக் கொண்டிருக்கும். ஒற்றை ஆட்சியின் சாராம்சம் என்பது, இறைமை அதிகாரம் பகிரப்படமுடியாததாக இருக்கும். வேறு வார்த்தைகளில் கூறினால், மத்திய அரசின் அதிகாரங்கள் வரையறையற்றதாக இருப்பதாகும். ஒற்றை ஆட்சி அரசின் இரண்டு அடிப்படைப் பண்புகள்:



(1) மத்திய பாராளுமன்றமே அதி உச்ச அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

(2) இறைமை அதிகாரமுடைய துணை நிலை அமைப்புகளைக் கொண்டிராது.

இது குறித்து நிற்பது, சட்டத்தை ஆக்கும் துணை நிலை அமைப்புகள் இருக்க முடியாது என்பதல்ல. அவ்வாறு இருந்தாலும் குறித்த சட்டவாக்க துணை அமைப்புகள் மத்திய அரசின் மீயு யர் அதிகாரங்களுக்கு அமைய உருவாக்கப்படவும் கலைக்கப்படவும் முடியும் என்பதையே குறித்து நிற்கின் றது. எனவே, இதன் அடிப்படையில் எந்தவிதமான அர்த்தப்படுததலின்போதும்,

மேற்படி சட்டவாக்க துணை அமைப்புகளை இறைமை அதிகாரம் கொண்ட துணை அமைப்புகள் என அழைக்க முடியாது என்பதனையே இது குறித்து நிற்கின்றது. இறுதியாக, மத்திய அரசாங்கத்தினால் சட்டரீதியாக கையாளப்பட முடியாத முரண்பாடுகள் மத்திய அரசாங்கத்திற்கும் பிற அதிகார மையங்களுக்கும் இடையில் உருவாகும் சாத்தியப்பாடுகள் இல்லை என்பதையே இது குறிக்கிறது. ஆகவே, ஓர் ஒற்றை ஆட்சி அரசாங்கத்திற்கு அடிப்படையாக இருப்பவை:

1. மத்திய பாராளுமன்றமே அதி உச்ச அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

2. இறைமை அதிகாரமுடைய துணை நிலை அமைப்புகளைக் கொண்டிராது.

இதற்கு மாறாக, சமஸ்டி அரசில் ஆட்சி அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே பகிரப்பட்டிருக்கும். அவை ஒன்றுக்கொன்று குறைவான அதிகாரங்களைக் கொண்டவையல்ல. மாறாக, தத்தம் எல்லைகளுக்குள் சமமான அதிகாரமும் சுயாதீனமும் கொண்டவையாக இருக்கும். ஒன்றுக்கொன்று சுயாதீனமான சமமான அதிகாரம் கொண்ட அமைப்புகள் இருப்பதே சமஸ்டி ஆட்சியின் தத்துவங்களாகும்.

சமஸ்டி அரசாங்கம் சில விடயங்களில் இறைமை அதிகாரத்தைக் கொண்டிருருக்கும் மாநில அரசாங்கங்கள் ஏனைய விடயங்களில் இறைமை அதிகாரத்தைக் கொண்டிருக்கும் அவை ஒவ்வொன்றும் தத்தம் எல்லைகளுக்குள், மற்றொன்றின் கட்டுப்பாடின்றி தங்கள் அதிகாரங்களைச் செயல்படுத்தும். ஒன்றின் அதிகாரம் மற்றொன்றுக்குக் குறைவானதல்ல. இந்த அம்சமே சமஸ்டி அரசியலமைப்பையும் ஒற்றையாட்சி அரசியலமைப்பையும் வேறுபடுத்தி நிற்கிறது. ஒற்றையாட்சி அரசியலமைப்பில், இறைமை அதிகாரம் முழுமையாக மத்திய அரசிடமே நிலைத்திருக்கும். (தீர்ப்பின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 38 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கு உட்பட்டு உருவாக்கப்பட்ட 13ம் திருத்தமும், மாகாணசபை முறைமையும் எந்த வகையிலும் ஈழத் தமிழ் மக்களுக்கான தீர்வின் ஆரம்பப்புள்ளியாகக் கூட அமையவில்லை. தமிழ் மக்களுக்குரிய அதிகாரப் பரவலாக்கல் என்ற போர்வையில், ஒரு கையால் கொடுப்பது போல் கொடுத்து - மறு கையால் பறித்தெடுக்கும் வகையில் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் 13 ம் திருத்தச் சட்டம் அமைந்திருந்த காரணத்தாலேயே, தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டிருந்த அனைத்துக் கட்சிகளும் 13 ம் திருத்தம் உள்ளிட்ட ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட விடயங்களை அடியோடு நிராகரித்து வந்தனர். இதனையே 2009க்குப் பின்னரான அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் மிகத் தெளிவான ஆணையாகவும் வழங்கி வந்துள்ளனர்.

இந்நிலையில் - இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 2015 - 2019 காலப்பகுதியில் பதவி வகித்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட 'ஏக்ய ராஜ்ய' (ஒற்றையாட்சி என்பதன் சிங்களச் சொற்பதம்) வரைபை இறுதிப்படுத்தி நிறைவேற்றப்போவதாக தற்போதய அரசாங்கம் அறிவித்திருந்தது. கடந்த 2024 சனாதிபதித் தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவரது தலைமையிலான அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்களாலும் இக்கருத்து தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 'ஏக்ய ராஜ்ய' வரையானது ஏற்கனவே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தினை விடவும் மிகவும் பலவீனமானது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே,

தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி ஆட்சி முறைமைக்கு சிறிலங்காவின் அரசியலமைப்பு முறைமை மாற்றப்பட்டால் மட்டுமே தமிழ்த் தேசத்துடைய தனித்துவமும் அடையாளமும் பாதுகாக்கப்படும். சிங்கள பௌத்த பேரினவாத மகாவம்ச மனநிலைக்குள் நின்று, தமிழினவழிப்பை மேற்கொண்டுவரும் ஒற்றையாட்சி முறைமைக்குள் ஒருபோதும் பாதுகாக்க முடியாது என்பதே வரலாற்று அனுபவமாகும்.

இந்நிலையில், தொப்புள் கொடி உறவுகளான தமிழக மக்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழக வெற்றிக் கழகமும், அதன் தலைவரான தாங்களும்

மத்திய அரசு ஊடாக -

சிறிலங்கா அரசு மீது அழுத்தங்களை பிரயோகித்து ஏக்கிய ராஜ்ய அரசியல் யாப்பு நிறைவேற்றப்படுவதை தடுத்து நிறுத்தவும்,

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக புதிய அரசியல் அமைப்பில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய கூட்டாட்சி முறைமை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே ஈழத் தமிழ் மக்களுடைய அவசரமான எதிர்பார்ப்பாகும்.

சிறிலங்காவின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் இன்றைய சூழலில், சிறிலங்காவை மீளவும் கட்டியெழுப்புவதற்கு கணிசமான பங்களிப்பினை இந்தியா வழங்கிவருகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தி, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை இந்தியாவினால் சாத்தியமாக்க முடியும்.

இவ்விடயம் தொடர்பில் - தமிழக வெற்றிக் கழகம் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதோடு, அதனையே தமிழக அரசின் நிலைப்பாடாகவும் வெளிப்படுத்தி, இந்நிலைப்பாட்டை இந்திய ஒன்றிய அரசையும் ஆதரிக்க வலியுறுத்த வேண்டுமென அன்புரிமையுடன் எதிர்பார்க்கின்றோம். தமிழக அரசும், தமிழகத்தின் அரசியல் கட்சிகளும், ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த பல தசாப்தங்களாக ஆற்றிவரும் பங்களிப்புகளை நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான மேற்படி நோக்கங்களை வென்றெடுக்க செயற்படும் அதேவேளை

- தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களின் நலன் மற்றும் மறுவாழ்வு தொடர்பாகவும்,
- இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு நிலையான தீர்வை ஏற்படுத்தும் விடயங்களிலும்,

தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளுக்கும் இடையில் ஒருமித்த கருத்தொற்றுமை உருவாக்கப்படுவது காலத்தின் தேவையாகும் என்றும் நாம் கருதுகின்றோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஜெலென்ஸ்கிக்கு சவாலாக வலெரி ஜலுஸ்னி:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# உக்ரேனில் உருவாகும் புதிய இராணுவ தலைமை!

**போர் நிகழும் உக்ரைன் அரசியலில் புதிய திருப்பமா என்ற சந்தேகம் எழுகிறது. ஜெலென்ஸ்கிக்கு சவாலாக உருவாகும் புதிய தலைவராக வலெரி ஜலுஸ்னி பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. போர்க் களத்திலிருந்து அரசியல் அரங்கம் வரை ஒரு ஆழமான விரிசலை கொண்ட இருவரின் தலைமை பதவிக்கான போட்டி தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது.**

உக்ரைன் - ரஷ்யா போர் ஐந்தாவது ஆண்டை நோக்கி நகரும் நிலையில், போர்க்களத்தில் மட்டுமல்லாமல் அரசியல் அரங்கிலும் புதிய மாற்றங்களுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. உலகின் கவனத்தை ஈர்த்த இந்தப் போர், இனி வெறும் இராணுவ மோதலாக மட்டும் இல்லாமல், அதிகாரம், ஜனநாயகம், தேசியத் தலைமை, மேற்கத்திய கூட்டணிகளின் எதிர்காலம் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு அமைப்பின் மறுசீரமைப்பு ஆகியவற்றை நிர்ணயிக்கும் ஒரு பரந்த அரசியல் செயல்முறையாக மாறியுள்ளது.

இந்தச் சூழலில், உக்ரைனின் முன்னாள் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதியும் தற்போது ஐக்கிய இராச்சியத்திற்கான உக்ரைன் தூதருமான வலெரி ஜலுஸ்னி (Valerii Zaluzhnyi) எதிர்கால ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் புதிய அரசியல் விவாதத்தை உருவாக்கியுள்ளன. அவர் இதுவரை அதிகாரப்பூர்வமாக தனது வேட்புமனுவை அறிவிக்கவில்லை. இருப்பினும், கருத்துக் கணிப்புகளில் தொடர்ந்து உயர்ந்த பொதுமக்கள் ஆதரவைப் பெற்று வருவது, அவரை உக்ரைனின் எதிர்கால அரசியல் தலைவர்களில் ஒருவராகப் பார்க்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

இது ஜெலென்ஸ்கி மற்றும் ஜலுஸ்னி ஆகிய இரு நபர்களுக்கிடையிலான போட்டி மட்டுமல்ல. இது போரை யார் சிறப்பாக வழிநடத்தினர் என்பதற்கான மதிப்பீடும் அல்ல. மாறாக, போருக்குப் பிந்தைய உக்ரைனை யார் கட்டியெழுப்பப் போகிறார்கள் என்ற மிகப் பெரிய அரசியல் கேள்வியின் தொடக்கமாக இதைப் பார்க்க வேண்டும்.

### போர் ஆரம்பத்தில் இரட்டைத் தலைமை:

உக்ரேன் மீது 2022 பிப்ரவரி 24 அன்று ரஷ்யா முழுமையான படையெடுப்பை ஆரம்பித்தபோது, மேற்கத்திய இராணுவ ஆய்வாளர்களின் பெரும்பாலானோர் கீவ் சில நாட்களிலேயே வீழ்ந்துவிடும் எனக் கணித்தனர். ஆனால் அந்த கணிப்புகள் அனைத்தும் தவறின.

இந்த எதிர்பாராத வெற்றியின் பின்னணியில் இரண்டு முக்கியமான தலைமைச் சின்னங்கள் உருவாயின. ஒன்று அரசியல் ரீதியாக நாட்டை விட்டு வெளியேற மறுத்து, எனக்கு பயணம் வேண்டாம் ஆயுதங்கள்தான் வேண்டும் என்ற உறுதியான செய்தியின் மூலம் உலகின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதி விலோடிமிர் ஜெலென்ஸ்கி. மற்றொன்று போர்க்களத்தில் ரஷ்ய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திய தலைமைத் தளபதி வலெரி ஜலுஸ்னி.

ஜெலென்ஸ்கி உலக அரங்கில் உக்ரைனின் அரசியல் முகமாக மாறியபோது, ஜலுஸ்னி உக்ரைனின் இராணுவ எதிர்ப்பின் முகமாக உருவெடுத்தார். இந்த இரட்டைத் தலைமையே போரின் ஆரம்ப வெற்றிகளுக்கு முக்கிய காரணமாகக் கருதப்பட்டது.

ஜலுஸ்னியின் புகழ் வெறும் இராணுவ பதவியால் உருவானதல்ல. அவரது தலைமையின் கீழ் உக்ரைன் படைகள் ரஷ்யாவின் ஆரம்பகட்டத் திட்டங்களை முறியடித்தன. கீவின் பாதுகாப்பு, கார்கிவ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்தாக்குதல்கள் மற்றும் கெர்சோன் பகுதியை மீட்டெடுத்த நடவடிக்கைகள் ஆகியவை அவரை மக்கள் மத்தியில் மிகுந்த மதிப்புக்குரியவராக மாற்றின.



அவரது தலைமையின் மற்றொரு சிறப்பம்சம், சோவியத் கால இராணுவக் கட்டுப்பாட்டு முறையிலிருந்து விலகி, மேற்கத்திய கட்டளைத் தத்துவங்களைப் பயன்படுத்தியதுதான். கீழ்மட்டத் தளபதிகளுக்கு முடிவெடுக்கும் சுதந்திரம் வழங்கிய முறை, வேகமான நடவடிக்கைகளுக்கும் அதிக செயல்திறனுக்கும் வழிவகுத்தது. இதன் விளைவாக, ஜலுஸ்னி ஒரு இராணுவ அதிகாரி மட்டுமல்ல தேசிய தன்னம்பிக்கையின் சின்னமாக உருவானார்.

### ஜெலென்ஸ்கி - ஜலுஸ்னி உறவில் விரிசல்:

போரின் முதல் ஆண்டில் இருவரும் ஒரே அணியாகக் கருதப்பட்டனர். ஆனால் 2023 ஆம் ஆண்டிலிருந்து சூழல் மாறத் தொடங்கியது. உக்ரைனின் எதிர்தாக்குதல் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியளிக்கவில்லை. ரஷ்யா பலப்படுத்திய பாதுகாப்புக் கோட்டுகள், கண்ணிவெடிகள், ட்ரோன் போர் மற்றும் நீண்டகால தேய்மானப் போர் ஆகியவை உக்ரைனின் முன்னேற்றத்தைத் தடுத்தன.

இந்த சூழலில் ஜலுஸ்னி, போர் முட்டுக்கட்டையை எட்டியுள்ளதாக ஒரு கட்டுரையில் குறிப்பிட்டது அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த மதிப்பீடு உக்ரைன் அரசின் அதிகாரப்பூர்வ அரசியல் தகவல் பரிமாற்றத்துடன் முழுமையாக ஒத்துப்போகவில்லை என்ற விமர்சனங்களும் எழுந்தன. பின்னர், 2024 ஆம் ஆண்டு அவர் தலைமைத் தளபதி பதவியில் இருந்து மாற்றப்பட்டார். இது அதிகாரப்பூர்வமாக இராணுவ மறுசீரமைப்பாக விளக்கப்பட்டாலும், அரசியல் மற்றும் இராணுவத் தலைமைகளுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் முக்கிய காரணமாக இருந்திருக்கலாம் என்று பல ஆய்வாளர்கள் கருதினர்.

### தூதரா - எதிர்கால அரசியல் தலைவரா?

ஜலுஸ்னியை ஐக்கிய இராச்சியத்திற்கான தூதராக நியமித்தது பலவிதமான விளக்கங்களை உருவாக்கியது. ஒரு தரப்பு, இது அவருடைய சர்வதேச அனுபவத்தை விரிவுபடுத்தும் முயற்சி என்று கருதுகிறது. மற்றொரு தரப்பு, உள்நாட்டு அரசியலில் அவருடைய செல்வாக்கை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இதைப் பார்க்கிறது.

ஆனால் வரலாறு வேறொன்றைக் கூறுகிறது. பல நாடுகளில் தூதரகப் பதவிகள் எதிர்கால தேசியத் தலைவர்களுக்கான அரசியல் பயிற்சிக் கட்டமாக இருந்துள்ளன. சர்வதேச உறவுகள், பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் கூட்டணிகள் குறித்து நேரடி அனுபவம் பெறும் வாய்ப்பை இத்தகைய பதவிகள் வழங்குகின்றன.

சமீபத்திய கருத்துக் கணிப்புகள், ஜலுஸ்னி மீது மக்களின் நம்பிக்கை மிகவும் உயர்வாக இருப்பதைக் காட்டுகின்றன. அதேவேளை, ஜெலென்ஸ்கியும் இன்னும் குறிப்பிடத்தக்க ஆதரவைத் தக்க வைத்திருக்கிறார். இங்கு கவனிக்க வேண்டியது, இது தேர்தல் முடிவு அல்ல, நம்பிக்கை அளவீடு மட்டுமே.

போரின் போது மக்கள் இராணுவத் தலைவர்களை அதிகமாக நம்புவது உலக அரசியலில் புதிய நிகழ்வு அல்ல.

ஆனால் தேர்தல் காலத்தில் பொருளாதாரம், சமூக நலன், மறுசீரமைப்பு, ஊழல் எதிர்ப்பு, வெளிநாட்டு முதலீடு போன்ற பல புதிய அம்சங்கள் வாக்காளர்களின் முடிவை மாற்றக்கூடும். அதனால் கருத்துக் கணிப்புகளை நேரடியாக தேர்தல் வெற்றியுடன் இணைத்துப் பார்ப்பது சரியான அணுகுமுறை அல்ல.

### தேர்தல் ஏன் நடைபெறவில்லை?

உக்ரைனில் தற்போது போர் நிலை அமலில் உள்ளது. அந்நாட்டின் சட்டங்களின்படி போர் நிலை அமலில் இருக்கும் வரை ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த முடியாது. இதற்குக் காரணம் அரசியல் மட்டுமல்ல, நடைமுறையும் ஆகும். மில்லியன் கணக்கான உக்ரைனியர்கள் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளனர்.

இலட்சக்கணக்கான வீரர்கள் போர்முனையில் உள்ளனர். ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருக்கும் பகுதிகளில் தேர்தலை நடத்த இயலாது. தேர்தல் உள்கட்டமைப்புகள் மீதான ஏவுகணைத் தாக்குதல்களும் மிகப் பெரிய பாதுகாப்புச் சவாலாக இருக்கும். எனவே தேர்தல் தாமதம் ஜனநாயக மறுப்பு என்று மட்டும் கூற முடியாது, அது போரின் யதார்த்தத்துடன் தொடர்புடையது.

வொலோடிமிர் ஜெலென்ஸ்கி இன்னும் சர்வதேச அரங்கில் உக்ரைனின் முக்கிய அரசியல் முகமாக உள்ளார். அதேவேளை, வலெரி ஜலுஸ்னி போர்க்களத்தில் உருவான நம்பிக்கையின் அடையாளமாக வளர்ந்துள்ளார். இந்த இரு தலைவர்களும் உக்ரைனின் சமகால வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றவர்கள். எனினும், தற்போதைய சூழலில் ஜலுஸ்னி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்ற தகவல்கள் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். தேர்தல் எப்போது நடைபெறும் என்பதும் இன்னும் தெளிவாகவில்லை. போர் நிலை நீடிக்கும் வரை தேர்தல் நடத்தப்படுவதற்கான சட்ட மற்றும் நடைமுறை தடைகள் தொடர்கின்றன.

ஆனால் ஒரு விஷயம் தெளிவாகிறது. உக்ரைனின் அடுத்த தேர்தல் வெறும் ஆட்சிமாற்றத்தைத் தீர்மானிக்காது. அது போருக்குப் பிந்தைய தேசிய மறுசீரமைப்பு, ஐரோப்பிய பாதுகாப்பு அமைப்பின் எதிர்காலம், ரஷ்யாவுடனான நீண்டகால உறவுகள், மேற்கத்திய கூட்டணிகளின் நிலைத்தன்மை மற்றும் உலக ஒழுங்கின் அடுத்த கட்டத்தைப் பாதிக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் நிகழ்வாக அமையும். எனவே, ஜெலென்ஸ்கி மற்றும் ஜலுஸ்னி குறித்த விவாதம் தனிநபர்களைப் பற்றியது அல்ல. அது போரிலிருந்து அமைதிக்குச் செல்லும் ஒரு நாட்டின் அரசியல் பரிணாமம் குறித்த உலகளாவிய விவாதத்தின் ஒரு பகுதியாகும். ●

# தவெகவிடம் கூட்டணிக் கட்சிகளை திமுக பறிகொடுத்தது எப்படி?

**- ஒரு விரைவுப் பார்வை-**

விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அமைந்த பின்னர் தமிழகத்தின் அரசியல் களமே முற்றுமுழுதாக மாறிப்போய் இருக்கிறது. திமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் இப்போது கொத்தாக தவெக பக்கம் மாறியுள்ளது. திமுக தனது கூட்டணி கட்சிகளை பறிகொடுத்ததன் பின்புலத்தை கவனிப்போம்.

கருணாநிதி, எம்ஜிஆர் - ஜெயலலிதா காலங்களில் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்துமே திமுக, அதிமுக என மாறி மாறி கூட்டணி அமைத்து தேர்தல்களை சந்திக்கும். அவ்வப்போது மூன்றாவது அணி தோன்றினாலும் அவை பெரிதாக மக்களிடம் எடுபட்டதில்லை. இதனால், இந்த இரு பிரதான கட்சிகளிடமே கூட்டணி கட்சிகள் நம்பிக்கையோடு கைகோப்பது வழக்கம்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர், பாஜகவோடு அதிமுக கூட்டணி அமைத்தது. இதன் காரணமாக காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, ஐயுஎம்எல் கட்சிகள் அதிமுக என்ற தெரிவையே முற்றிலும் தவிர்த்தன. எடப்பாடி பழனிசாமியின் கைகளில் அதிமுக வந்த பின்னர், இந்தக் கட்சிகள் ஒரேயடியாக திமுக கூட்டணியில் ஐக்கியமாகின. எத்தனை விமர்சனங்கள் வந்தபோதும், கடந்த 10 ஆண்டுகளாக இக்கட்சிகள் திமுக கூட்டணியில் விடாமல் தொடர்ந்து வந்தன.



இரு சட்டப்பேரவைத் தேர்தல்கள், இரு மக்களவைத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்களை ஒன்றாக சந்தித்த இக்கட்சிகள் இப்போது ஒரேயடியாக தவெக பக்கம் தாவியுள்ளன. ஆட்சி கவிழ்ந்துவிடும், ஆளுநர் ஆட்சி வந்துவிடும் என சாக்குப்போக்கு சொல்லி முதலில் ஆதரவளித்த கட்சிகள், இப்போது திமுகவை கடுமையாக விமர்சிக்கவும் தொடங்கியுள்ளன. திமுகவும் இந்தக் கட்சிகள் மீதான விமர்சனத்தை கூர்மைப்படுத்தியுள்ளது.

2024-ல் விஜய் அரசியலுக்கு வருவதற்கு முன்பு திமுக - அதிமுக என இருமுனைப் போட்டியே நிலவியது. அதிமுகவின் பக்கம் பாஜக இருப்பதால், காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, ஐயுஎம்எல் போன்ற கட்சிகளால் அந்த அணியின் பக்கம் போக முடியாத நிலை இருந்தது. இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட திமுக, 2021 சட்டப்பேரவைத் தேர்தலில், இக்கட்சிகளின் தொகுதிகளை கணிசமாக குறைத்தது. இடதுசாரிகள், விசிக, மதிமுக கட்சிகளுக்கு தலா வெறும் 6 தொகுதிகள் மட்டுமே அப்போது ஒதுக்கப்பட்டன. காங்கிரஸுக்கும் 25 தொகுதிகள் மட்டுமே கிடைத்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு, கிழக்கில் மட்டும் அரசு மாகாண தேர்தல் நடத்த திட்டம்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 05

அடுத்த வருடத்தின் முதல் 06 மாதங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, நீதிமன்ற சவால்களுக்கு அப்பாற்பட்ட வகையில் தனி காணி மற்றும் பொலிஸ் அதிகார சட்டங்களை உருவாக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டினார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைப் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் அடுத்த கட்ட சதி என்னவென்றால், அடுத்த வருடத்தின் முதல் 06 மாதங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கில் மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அங்குத் தெரிவாகின்ற முதலமைச்சருக்குத் தேவையான ஆளுநரை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துக் கொடுப்பார். அதன் பிறகு அவர்களுக்குத் தேவையான காணி மற்றும் பொலிஸ் அதிகார சட்டங்களை மாகாண சபை ஊடாகக் கொண்டு வருவார்கள்.

தற்போதைய அரசியலமைப்பின் படி பாராளுமன்றச் சட்டத்துக்கு எதிராக எவராலும் நீதிமன்றம் செல்ல முடிந்தாலும், மாகாண சபைச் சட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியாது என்ற சட்டச் சிக்கல் காணப்படுகின்றது. இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே அரசாங்கம் முற்படுகின்றது. ஆளுநராகத் தமக்கு வேண்டிய நம்பிக்கையானவர்களை நியமித்து, அந்த இரு மாகாணங்களிலும் தனிச் சட்டம், தனி காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை உருவாக்குவதே இவர்களின் பிரதான திட்டமாகும்.

இவர்களின் இறுதி எண்ணம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிர்க்கட்சியில் இருந்து ஒருவரைக் கூட இல்லாமல் செய்து, இந்த அடக்குமுறை இயந்திரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளை முழுமையாகவும், பெரும்பான்மையினரின் வாக்குகளில் 10 வீதம்அல்லது 15 வீத வாக்குகளையும் பெற்று, மலையக வாக்குகளையும் பெற்று ஜனாதிபதியாகத் தொடர வேண்டும் என்பதாகும்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வென்றது சில லட்சம் வாக்குகளால்தான் என்பதையும், வெளிநாட்டு வாக்குகளுக்கு வாக்குரிமை வழங்க முயல்வது இந்தச் சதியின் ஒரு பகுதியே என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்பாராத விதமாகத் தமக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், சர்வதேச சக்திகளின் தேவைகளை நிறைவேற்றவும் ஜனநாயகத்தையும் சமூக ஒழுக்கங்களையும் குழிதோண்டிப் புதைத்து, எந்தவொரு கீழ்த்தரமான வேலைக்கும் செல்லத் தயாராக இருக்கும் அரசாங்கத்தின் இந்த ஆபத்தான அரசியல் ஆட்டத்தை அப்படியே வேடிக்கை பார்க்க முடியாது. அதனை முறியடிக்க இந்நாட்டின் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரளத் தயாராக இருக்கின்றன -என்றார்.

# டெங்கு அபாயத்தைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்து செயல்படவேண்டும்

## பாதுகாப்புச் செயலாளர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 05

டெங்கு நோய் பரவக்கூடிய கடுமையான அபாயம் காணப்படுவதால், இந்த நெருக்கடியை வெல்வதற்கு அரச நிறுவனங்களுக்கு இடையே உள்ள பரஸ்பர தொடர்பை அதிகபட்சமாகப் பயன்படுத்த வேண்டும் என பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொன்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் கழிவு தொடர்பான பிரச்சினை மற்றும் டெங்கு அபாயத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள கழிவு சேகரிக்கும் செயல்முறையை மேலும் முறைப்படுத்தவும், வளங்களை அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தவும் பாதுகாப்புச் செயலாளர் இதன்போது அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதேபோல், நீண்டகால செயல்பாட்டு வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில், பாதிக்கப்பட்டுள்ள வலயங்களில் தற்போது தேங்கிக்கிடக்கும் கழிவுகளை விரைவாக அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

அத்துடன், தற்போதுள்ள கழிவு முகாமைத்துவம் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்காக, அனைத்து அரச நிறுவனங்களினதும் ஒருங்கிணைப்புடன் கூடிய, விரைவான மற்றும் நிலையான அணுகுமுறையின் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மிகவும் தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நகரமொன்றை உருவாக்குவதற்காக, தொடர்புடைய அனைத்துப் பங்குதாரர்களும் ஒத்துழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் பாதுகாப்புச் செயலாளர் வலியுறுத்தினார்.

தற்போதுள்ள கழிவு சேகரிப்பு செயல்முறையை மிகவும் முறைப்படுத்தவும், வளப் பயன்பாட்டை அதிகபட்ச செயல்திறனுடன் மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது, தற்போதைய கழிவு முகாமைத்துவம் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், பிரச்சினைகளுக்கு நிரந்தரமான மற்றும் நிலையான தீர்வை வழங்குவதற்காக எடுக்கக்கூடிய நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால உத்திகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## இலஞ்சம் பெற்ற...

விஜயதாச ராஜபக்க்ஷவின் மகன் சட்டத்தரணி ரக்கித நிர்மல ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரண தொகுதி அமைப்பாளர் சரித வசந்த குமார அபேசிங்க மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் வருஷ ஹென்னதிகே அருண சதுரங்க ஆகிய மூவரும் டுபாய்க்குச் சென்று இந்த பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் சந்தேகநபர்கள் இந்த கையூட்டல் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக டுபாய் சென்றிருந்த காலப்பகுதியில், முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் டுபாயில் தங்கியிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, இந்த இலஞ்ச சம்பவத்துடன் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான உதவி சட்டப் பணிப்பாளர் அனுஷ சம்பந்தப்பெரும தெரிவித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத் தரவுகளின் படி, விஜயதாச ராஜபக்ஷ 21-03-2023 முதல் 28-03-2023 வரை டுபாயில் தங்கியிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், லசந்த மஞ்சுள சில்வா எனப்படும் நபருக்கு மீள வழங்கப்பட்டுள்ள 200 இலட்சம் ரூபாய் பணம், நுகேகொடை, நாவல வீதியில் உள்ள விஜயபா மாவத்தையில் அமைந்துள்ள ஒரு வீட்டில் வைத்தே வழங்கப்பட்டுள்ளது.

அந்த வீடு முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்குச் சொந்தமானது என்பதும் விசாரணைகளில் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (அ)

# தவெகவிடம் கூட்டணிக் கட்சிகளை...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாஜகவின் ஆதிக்கத்தை தடுக்க வேண்டும் என்ற முழக்கத்தை முன்வைத்து கூட்டணிக் கட்சிகளை இதற்கு ஒப்புக்கொள்ளவும் செய்தது திமுக. மதிமுக, விசிக போன்ற கட்சிகளை திமுக சின்னத்தில் நிற்க சொல்லி நெருக்கடியும் கொடுக்கப்பட்டது. ஆனாலும், விசிக பிடிவாதமாக தனிச் சின்னத்தில் போட்டியிட்டது. மதிமுக உதயசூரியனில் களம் கண்டது.

உள்ளாட்சி தேர்தலிலும் மிகச் சொற்பமான இடங்களை மட்டுமே கூட்டணி கட்சிகளுக்கு வழங்கியது திமுக. மேயர், துணை மேயர், சேர்மேன் பதவிகளை கொடுப்பதாக அறிவித்து, சில இடங்களில் பொறுப்பேற்க விடாமல் செய்யப்பட்ட காட்சிகளும் நடந்தன. ஆனாலும், திமுக ஆட்சியில் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தபோதும், இக்கட்சிகள் பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை. ஆட்சியில் இருந்தபோது கூட்டணிக் கட்சிகள் வைத்த கோரிக்கைகளும் பெரிதாக நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்தன. மேலும், திமுகவின் இரண்டாம் கட்ட தலைவர்கள் கூட்டணிக் கட்சியினரை மோசமாக நடத்தினர் என்றும் புகார்கள் எழுந்தன.

தவெக தொடங்கப்பட்ட பின்னர், காங்கிரஸ், விசிக, இடதுசாரிகளை கூட்டணிக்குள் கொண்டுவர கடைசி வரை முயற்சி செய்தார் விஜய். ஆனாலும், திமுக எப்படியோ தனது கூட்டணியை தக்கவைத்தது. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் தொகுதிப் பங்கீட்டில் அனைவரையும் சாறாக பிழித்து எடுத்தது திமுக. இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை எதிர்பார்த்த இடதுசாரிகளுக்கு தலா 5 தொகுதிகள் மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆட்சியில் பங்கு என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்த விசிகவுக்கு 8 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டது. ஐயுஎம்எல்க்கு வெறும் 2 தொகுதிகள் மட்டுமே கிடைத்தது. மதிமுகவும் 4 தொகுதிகளை ஏற்றுக்கொண்டு உதய சூரியனில் களமிறங்கியது. திமுக கொடுத்த நெருக்கடியில் தொகுதிகளே வேண்டாம் என கும்பிடு போட்டார் கமல்ஹாசன்.

தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட நெருடல், தேர்தல் களம் வரை எதிரொலித்தது. இதன் காரணமாக திமுக - கூட்டணிக் கட்சிகள் இடையே முறையான ஒருங்கிணைப்பு களத்தில் உருவாகவில்லை. தங்கள் கட்சிக்கு போதுமான தொகுதிகள் ஒதுக்கவில்லை என அடிமட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தேர்தல் பணிகளில் சுணக்கம் காட்டினர். திமுக கூட்டணியின் கடும் பின்னடைவுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகிப் போனது.

இந்தச் சூழலில், தேர்தல் முடிவுகளில் தவெக தனிப் பெரும்பான்மை பெற்ற பின்னர், காங்கிரஸ் எந்த யோசனையும் இல்லாமல் உடனடியாக விஜய்க்கு ஆதரவை தெரிவித்தது. மரியாதை நிமித்தமாக மு.க.ஸ்டாலினை சந்தித்த இடதுசாரிகள், விசிக தலைவர்களும், தவெகவுக்கான ஆதரவை உறுதிப் படுத்தினர். பின்னர் ஐயுஎம்எல் கூட்டணியில் சேர்ந்தது. இப்போது மதிமுகவும் இணைந்துள்ளது. காங்கிரஸ், விசிக, ஐயுஎம்எல் கட்சிக்கு அமைச்சரவையிலும் இடம் கொடுத்துள்ளது தவெக.

இப்போது திமுக - முன்னாள் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே காரசார விவாதங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது.

“திமுக ஆட்சியில் நடந்த தவறுகளை வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டிருந்தோம்” என கோரஸாக பேச ஆரம்பித்துள்ளனர் முன்னாள் சகாக்கள்.

திமுகவும், முன்னாள் கூட்டணிக் கட்சிகளை கடுமையாக விமர்சித்து வருகிறது. “கூட்டணி கட்சிகளிடம் திமுக பண்ணையார்த்தனமாக நடந்துகொண்டதே அவர்கள் வெளியேற காரணம்” என அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வெளிப்படையாகவே பேசினார்.

“இந்த 5 ஆண்டுகள் மட்டுமல்ல, அடுத்த 5 ஆண்டுகளும் விஜய்தான் முதல்வர்” என தெரிவித்துள்ளார் வைகோ. தவெக கூட்டணியில் இணைந்துள்ள மற்ற கட்சிகளின் எண்ணமும் இதுதான்.

திமுகவோடு இப்போது தேமுதிகவும் இன்னும் சில சிறிய கட்சிகளும் மட்டுமே உள்ளது. அடுத்தடுத்து இடைத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல்கள் வரவிருக்கும் நிலையில், திமுக எப்படி வலுவாக தேர்தலை சந்திக்கும் என்று பார்ப்போம்.

(தி-இந்து)

# தமிழக முதல்வர் ஜோசப்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சட்டப்பேரவையில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள கட்சிகள் மட்டுமன்றி - ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை, ஈழத் தமிழ் அகதிகளின் நலன் சார்ந்த விடயங்களில் அக்கறையுடன் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் நிரந்தரமாக தீர்வுகாணும் விடயங்களில் அக்கறையுடன் செயற்படக்கூடிய அரசியல் கட்சிகளது பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஓர் அனைத்துக் கட்சி ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்படுவது மிகவும் பயனுள்ளதாக அமையும் என நாம் கருதுகின்றோம்.

அவ்வாறானதோர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக, ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் தமிழகத்தின் ஒருமித்த நிலைப்பாட்டை உருவாக்கும் வகையில் ஒரு அனைத்துக் கட்சி மாநாட்டை நடத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது அவசியமானது என்பதும் எமது வேண்டுகோளாகும்.

அத்தகைய ஒருமித்த அரசியல் நிலைப்பாட்டுடன், இந்திய ஒன்றிய அரசுக்கு வலுவான ஜனநாயகச் செய்தியை எடுத்துரைப்பதுடன், கட்டமைப்பு சார் இனவழிப்பை தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் சிறிலங்கா அரசுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுக்கும் ஈழத்தமிழர்கள் தனித்து விடப்பட்டவர்கள் அல்ல என்பதையும், ஈழத்தமிழர்களுடன் தமிழகம் எப்போதும் துணையாக நிற்கும் என்ற செய்தியையும் வெளிப்படுத்துவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உதயநிதி ஸ்டாலினை...

உத்தியோகபூர்வ பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜர் காண்டீபன் ஆகியோர் பங்கேற்றனர்.

சந்திப்பின்போது தமிழ் தேசிய அரசியல் நிலவரம் மற்றும் தமிழர் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பயங்கரவாத தடை...

மேலும், கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடுதல் மற்றும் ஊடக சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் ஒடுக்கப்பட்டு, பொதுவெளி பெருகிய முறையில் கட்டுப்படுத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

பரந்த அளவிலான நிறைவேற்று அதிகாரங்கள், முறையான நீதித்துறை மேற்பார்வையின்றி தன்னிச்சையான கைது மற்றும் நீண்டகால தடுப்புக்காவல், சித்திரவதைகளுக்கு உள்ளாகும் அபாயம் மற்றும் போதிய நியாயமான விசாரணைப் பாதுகாப்புகள் இல்லாமை ஆகிய விவகாரங்கள் குறித்தும் ஐநா மனித உரிமைகள் அலுவலகம் தனது கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது.

பொலிஸாரின் காவலில் இருக்கும்போது வழங்கப்படும் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் ஆதாரமாக ஏற்கும் விதி நீக்கப்பட்டமை போன்ற சில சாதகமான மாற்றங்கள் இந்த புதிய வரைவில் சேர்க்கப்பட்டிருந்தாலும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் உள்நாட்டு அரசியலமைப்பு உத்தரவாதங்களுக்கு முரணான பல விதிகள் இன்னும் இதில் நீடிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இதனால், பழைய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அரங்கேறிய கடுமையான மனித உரிமை மீறல்கள் மீண்டும் தொடர்வதற்கான அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, சர்வதேச சட்டக் கோட்பாடுகளான சட்டபூர்வத்தன்மை, அவசியம் மற்றும் விகிதாசாரத்தன்மை ஆகியவற்றுக்கு இணங்குவதை உறுதி செய்யும் வகையில் இந்த தற்போதைய வரைவை கணிசமாக மாற்றி அமைக்குமாறு அரசாங்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சிவில் சமூகம் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் உண்மையான ஆலோசனை செயல்முறைகளில் ஈடுபடுமாறும், புதிய சட்டம் நிறைவேற்றப்படும் வரை தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை உடனடியாக தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும், பல்வேறு தரப்பினராலும் எழுப்பப்பட்ட கவலைகளுக்கு இணங்க, "அரசினைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலத்தை" அரசாங்கம் தற்போது மறுவரைவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையின்...

49.2 வீதமாகக் குறைந்துள்ளது.

இந்தக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் மொத்த தொழிலாளர் எண்ணிக்கை 8.41 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இதில் 5.40 மில்லியன் ஆண்களும், 3.01 மில்லியன் பெண்களும் அடங்குகின்றனர்.

அதேநேரம், பொருளாதார ரீதியாகச் செயலற்ற மக்கள் தொகை 8.67 மில்லியனாக உள்ளதோடு, அவர்களில் 72.2 வீதம்பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆண்களின் தொழிலாளர் பங்களிப்பு விகிதம் 70.1 வீதத்திலிருந்து 69.1 வீதமாகக் குறைந்துள்ள அதேவேளை, பெண்களின் பங்களிப்பு 32 வீதத்திலிருந்து 32.5 வீதமாகச் சற்று அதிகரித்துள்ளது.

நாட்டில் வேலைவாய்ப்பற்றோரின் மொத்த எண்ணிக்கை 311,495 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பெண்களின் வேலையின்மை விகிதம் 6.1 வீதமாக பதிவாகியுள்ளதுடன், இது ஆண்களின் வேலையின்மை விகிதத்தை விட (2.4 வீதம்) இரண்டு மடங்குக்கும் அதிகமானதாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், நாட்டில் கல்வி கற்ற ஆண்களை விட, கல்வி கற்ற பெண்களே அதிகளவில் வேலைவாய்ப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## மேலதிக கட்டண...

எவ்வாறாயினும், புதிய மேலதிக கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், இந்தத் தினசரிப் பதிவுகளின் எண்ணிக்கை தற்போது 300 முதல் 350 ஆகக் குறைவடைந்துள்ளது.

பிரதான வாகன முகவர்களினால் ஒரு இறக்குமதிப் பதிவின் கீழ் 50 முதல் 100 அல்லது அதற்கும் மேற்பட்ட வாகனங்கள் வரை ஒரே தடவையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட முடியும் என்பதால், பதிவுகளில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியானது ஒட்டுமொத்த வாகன இறக்குமதி எண்ணிக்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, விதிக்கப்பட்ட மேலதிக கட்டணம் காரணமாக தற்போது வாகன இறக்குமதி அளவு கணிசமாகக் குறைந்துள்ளமை தெளிவாக நிரூபணமாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதியின் போதான, 50 வீத மேலதிக கட்டணமானது கடந்த மே மாதம் 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் மூன்று மாத காலத்துக்கு தற்காலிகமாக விதிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இருப்பினும், இந்த கட்டணம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர், அதாவது மே 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வங்கிகளில் நாணய கடிதங்கள் திறக்கப்பட்டு முன்பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு இந்த மேலதிக கட்டண விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைத் தமிழருக்கு...

அமைப்பின் தலைவர் கு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாநிலத்தில் நடைபெற்று வரும் வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியில் இருந்து விலகி, "வீ த லீடர்ஸ்" என்ற புதிய அமைப்பைத் தொடங்கிய பின்னர், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக அண்ணாமலை குரல் கொடுத்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில், "போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, உலக நாடுகளெங்கும் புலம்பெயர்ந்து வாழும் ஒட்டுமொத்த இலங்கைத் தமிழர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் மட்டுமே சுமார் 90 ஆயிரம் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் வசித்து வருகின்றனர்.

இவ்வாறாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து துணை நிற்க வேண்டும்.

நான் பாரதிய ஜனதா கட்சியில் இருந்த காலப்பகுதியில், இலங்கைத் தமிழர்களுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உறுதுணையாகவும் உதவியாகவும் இருந்தேன்.

கட்சிப் பொறுப்பில் இருந்து விலகிய போதிலும், இனிவரும் காலங்களிலும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பாடுபடுவேன் என்பதுடன், அவர்களுக்கு எப்போதும் துணையாக நிற்பேன்." என தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காகவும், அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் தொடர்ந்து குரல் கொடுக்கப் போவதாக அண்ணாமலை இந்த விழாவில் உறுதியளித்துள்ளார். (அ)

## மக்கள் கோரிக்கை...

தெரிவித்தார்.

கண்டி, தலதா மாளிகையில் நேற்று மத வழிபாடுகளின் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது மக்கள் எதிர்கொண்டுள்ள நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும். இதைத் தவிர எமக்குக் கூறுவதற்கு வேறு வார்த்தைகள் எதுவும் இல்லை. இது குறித்து மக்களிடமே கேட்டால் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

யார் வேண்டுமானாலும் எங்களைக் கைது செய்யட்டும், கைது செய்வதற்கு வேறு யாரும் இல்லாததால் எங்களைத்தான் கைத செய்யப் பார்க்கின்றனர். மக்கள் எப்போதும் எங்களுடன்தான் இருக்கிறார்கள் என்பது தான் அதற்குக் காரணம். நான் ஒருபோதும் அரசியலில் இருந்து விடைபெறப் போவதில்லை. தொடர்ந்து மக்களுடன் இணைந்து செயற்படப் போகின்றேன்.

இனிவரும் தேர்தல்களில் அந்தந்தக் காலகட்டங்களில் மக்கள் யாரை எதிர்பார்க்கிறார்களோ, அவரையே வேட்பாளராகக் களமிறக்குவோம். மக்கள் கோரிக்கை விடுத்தால், நிச்சயமாக நாமலுக்கு அந்த வாய்ப்பை வழங்குவோம். மக்கள் கோராவிட்டால் அவ்வாறு வழங்க மாட்டோம்.

தற்போதைய ஆட்சியாளர்கள் விவசாயிகளுடன் நெருக்கமாக இல்லை. அவர்கள் விவசாயிகளைப் பற்றி வாய்வார்த்தையாக மட்டுமே பேசுகிறார்களே தவிர, உண்மையில் அவர்களோடு நிற்பதில்லை. அத்துடன், எதிர்காலத்தில் தமது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் ஒன்றிணைத்துக் கொண்டு பயணிப்போம் - என்றார். (அ)

## டெங்கு பரவலை...

சுற்றறிக்கையின் முன்னேற்றம் குறித்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

டெங்குவை ஒழிப்பதற்குப் பாரம்பரிய முறைகளிலிருந்து விடுபட்டு, நவீன மற்றும் புதிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்பை அதிகரிப்பது, வீடுகளைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுத்தமாக வைத்திருப்பது மற்றும் துல்லியமான தரவுகளின் அடிப்படையில் அபாய வலயங்களை மீட்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், டெங்கு அபாயம் அதிகம் உள்ள வலயங்களில் புகையடிக்கும் நடவடிக்கைகளை மேலும் அதிகரிப்பது தொடர்பாகவும், டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாட்டு அறையிலிருந்து கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

## முதல்வர் விஜய்யை...

தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜய்க்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த தூதுவர்,

இலங்கை மற்றும் தமிழ்நாட்டுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், இரு நாட்டு மக்களிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடியுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இந்தத் தொடர்புகளைத் தொடர்ந்து பேணி வளர்ப்பதில் இலங்கை கொண்டுள்ள உறுதிப்பாட்டை பிரதி தூதுவர் மீண்டும் வலியுறுத்தினார். (அ)

## நீதித்துறையை...

தலைவர்,

ஒரு நாட்டின் ஜனநாயகம் கட்டியெழுப்பப்படும் முக்கிய தூண்களான சட்டவாக்கம், நிறைவேற்றுத் துறை, நீதித்துறை மற்றும் சுதந்திர ஊடகம், சிவில் சமூக செயற்பாடுகள் ஊடாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும்.

தற்போதைய அரசாங்கம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை 63லிருந்து 65 ஆகவும், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை 65லிருந்து 67 ஆகவும் அதிகரிப்பதற்கு திடீர் அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கிறது.

அதேவேளையில் இந்த இரு உயர் நீதிமன்றங்களிலும் நிலவும் 8 நீதிபதி பதவிகளுக்கான வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் உள்ளது. இவ்வாறான தன்னிச்சையான அரசியலமைப்பு திருத்தங்கள் ஜனநாயகத்தின் மீதான பாரிய தாக்குதலாகும். அத்தோடு அது நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தும்.

நீதியை நிலைநாட்டுவதற்கும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கும் இந்த நடவடிக்கை ஒரு கடுமையான சவாலாகும். இது ஒட்டுமொத்த நீதித்துறை கட்டமைப்பிற்கும் ஏற்பட்டுள்ள பாரதூரமான தாக்கமாகும்.

"வளம்மிக்க நாடு - அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறக் கூடாது. இவ்வாறான திடீர் அரசியலமைப்பு திருத்தங்கள் மக்கள் ஆணையை முற்றாக அழித்து, நீதிமன்றத்தின் கௌரவத்தை சீர்குலைக்கின்றது.

இலங்கைக்கு தற்போதைய சூழலில் தேவைப்படுவது சர்வாதிகாரமல்ல, மாறாக ஜனநாயகத்தை வலுப்படுத்துவதே ஆகும். இனம், மதம், சாதி, வர்க்கம் அல்லது கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு, ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தவும் ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தயாராகவுள்ளதுடன், சர்வாதிகாரத்தை ஒழிப்பதற்கு முன்னின்று உழைக்கும்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 12 இலிருந்து 20 ஆகவும், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 11லிருந்து 17 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளுக்கு தட்டுப்பாடு நிலவினால், எண்ணிக்கையை அதிகரிக்க நாங்கள் தயாராக உள்ளோம். ஆனால், இந்த முறையில் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்கு ஒருபோதும் உடன்பட முடியாது.

நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது நீதிமன்றத்திற்கான வசதிகளை வழங்குவதாகும், ஆனால் ஓய்வுபெறும் வயதை இவ்வாறு திடீரென அதிகரிப்பது நீதிமன்றத்தின் நற்பெயரையும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் முற்றாக வீழ்த்தும் செயலாகும்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

## டெங்கு பரவலை ஒழிப்பதற்கு விமானப்படை சிறப்பு திட்டம்!

கொழும்பு, ஜூலை. 05

இலங்கை விமானப்படை நாடு தழுவிய சிறப்பு டெங்கு ஒழிப்புத் திட்டத்தைத் ஆரம்பித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்களின்படியும், இலங்கை விமானப்படைத் தளபதியின் நேரடி மேற்பார்வையின் கீழும், இலங்கை விமானப்படை, நாடு முழுவதும் அமைந்துள்ள விமானப்படைத் தளங்கள் வழியாக அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு சிறப்பு டெங்கு ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், இலங்கை விமானப்படைப் பணியாளர்கள், சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் சமூகத்தினருடன் இணைந்து, டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களைக் கண்டறிந்து அழித்தல், சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள்.

மக்களின் நலனை உறுதி செய்வதையும், டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இத்திட்டம், நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கித் தொடர்ச்சியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மீன் விலை உயர்வு

கொழும்பு, ஜூலை. 05

கடல் கொந்தளிப்பு காரணமாக கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாமையினால், சந்தையில் மீன்களின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

தற்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதில்லை என்றும், இதன் காரணமாகவே மீன் விலைகள் உயர்ந்துள்ளதாகவும் பேலியகொடை மத்திய மீன் சந்தை வளாகத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தைக்கு மீன் வரத்து குறைவடைந்துள்ளதால், சந்தைகளில் சில்லறை விலைகளும் கணிசமான அளவு உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# நீதியரசர்கள் ஓய்வூதிய வயதை தன்னிச்சையாக மாற்றக்கூடாது!

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 05

மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதிய வயதெல்லையை தன்னிச்சையாக மாற்றக்கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு மாற்றம் இந்த நேரத்தில் அவசியமற்றது அல்லது பொருத்தமற்றது என்பதே தமது சங்கத்தின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டினார்.

முறையே 63 மற்றும் 65 ஆகக் காணப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதிய வயதெல்லையை அதிகரிப்பதற்காக அரசியலமைப்பு திருத்தமொன்றை மேற்கொள்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற பொது கலந்துரையாடல் மன்றத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணி ரஜீவ் அமரசூரியவின் கையொப்பத்துடன் கூடிய கடிதமொன்று கடந்த நாள்களின்போது ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதிய வயதெல்லையை அதிகரிக்கும் ஆயத்தங்கள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் கொழும்பில் விசேட பொது கலந்துரையாடல் மன்றமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் அச்சங்கத்தின் உறுப்பினர்கள் மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சர்வஜன அதிகாரத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர உள்ளிட்ட அரசியல்வாதிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# டெங்குவால் பாதிக்கப்படும் பிள்ளைகளுக்கு பிற்காலத்தில் பாதிப்புகள் ஏற்படும் அபாயம்!

### சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 05

தற்போது சிறுவர்களிடையே டெங்கு நோய் பரவும் போக்குக் காணப்படுவதாகவும், இந்நோயினால் பாதிக்கப்படும் பிள்ளைகளுக்குப் பிற்காலத்தில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா, டெங்கு நோய் காரணமாகக் பிள்ளைகளுக்குப் பிற்காலத்தில் மூளைப் பாதிப்புகள், தசை மற்றும் எலும்புகளில் கடுமையான வலி, அத்துடன் இதயப் பாதிப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக டெங்கு நோய் ஏற்பட்டு ஏழு அல்லது எட்டு நாட்கள் ஆகும்போது, குழந்தை குணமடைவதற்கான அறிகுறிகளாக பசியின்மை நீங்குதல், புன்னகைத்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படும். எனினும், இவ்வாறான குணமடைவதற்கான அறிகுறிகள் தென்படாமல் குழந்தைக்குத் தொடர்ந்து காய்ச்சல் நீடிக்குமாயின், அது "எச்.எல்.எச்." எனப்படும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாட்டுடன் தொடர்புடைய காய்ச்சலாக இருக்கலாம் என்றும் வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டெங்குவினால் பிற்காலத்தில் அரிதாக மூளைக்கு பாதிப்பு ஏற்படலாம். இரண்டாவதாக, டெங்குவினால் தசை மற்றும் எலும்புகளில் வலி ஏற்படலாம். மூன்றாவதாக, டெங்குவினால் இதயத்திற்குப் பாதிப்புகள் ஏற்படலாம். மேலும், அரிதாக டெங்கு நோய் ஏற்பட்ட பின்னர் தொடர்ந்து காய்ச்சல் நீடிக்கலாம், நோய் எதிர்ப்புச் சக்தியில் ஏதேனும் குறைபாடு ஏற்படலாம். எனவே இது ஒரு விசேட நோய் நிலைமையாகும்-என்றார். (அ)

## நெல் களஞ்சியசாலைகளை உடனடியாக திறக்கவேண்டும்!

### விவசாயிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 05

நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக அரச நெல் களஞ்சியசாலைகளை உடனடியாகத் திறக்குமாறு விவசாயிகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், தமது நெல்லுக்கு முறையான நியாயமான விலையொன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சிறுபோக நெல்லுக்கான சான்று விலையொன்றை வர்த்தக அமைச்சு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்த போதிலும், அந்த விலை தமக்கு போதுமானதாக இல்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக ஹிங்குராண - பெரனிகம பகுதியில் அமைந்துள்ள அரசாங்க நெல் களஞ்சியசாலை இதுவரை திறக்கப்படவில்லை எனவும் விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

## டெங்கு வைரஸ் வீரியத்தில் மாற்றம்!

கொழும்பு, ஜூலை. 05

நாட்டில் தற்போது டெங்கு நோய் பரவல் கணிசமாக அதிகரித்துள்ளமைக்கு, டெங்கு வைரஸ் வீரியத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமே முக்கிய காரணம் என பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமைகள் பொதுவாக 4 வருடங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் ஏற்படுவது இயற்கையான ஒரு போக்காகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு, பொதுமக்கள் தங்களது சூழலைத் தொடர்ச்சியாக சுத்தமாக வைத்திருப்பதுடன், தத்தமது பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்ற வேண்டும் என பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

சாதாரண வடிகால்கள் அல்லது கால்வாய்களை விட, வீடுகள் மற்றும் கட்டடங்களுக்குள் தேங்கி நிற்கும் சுத்தமான நீரிலேயே டெங்கு நுளம்புகள் அதிகமாகப் பெருகுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாகக் கடந்த சில தினங்களாக ஜயவர்தனபுர கோட்டை பகுதியை மையப்படுத்தி விசேட தேடுதல் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அதிக அவதானமிக்க வலயங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சுமார் 3,500 வீடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த தொடர்ச்சியான வேலைத்திட்டம் காரணமாக, தற்போது குறித்த பகுதிக்குள் டெங்கு பரவலை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாக பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## பொறுப்புமிக்க வணிகச் சூழலை உருவாக்க புதிய வழிகாட்டல்கள்!

### மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை. 05

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வரலாற்றில் முதற்தடவையாக வணிகம் மற்றும் மனித உரிமைகள் மீதான தேசிய வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

பெருநிறுவனங்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளில் மனித உரிமைக் கோட்பாடுகளைக் கட்டாயமாக உள்வாங்குவதையும், பொறுப்புவாய்ந்த வணிக நடத்தைகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் வணிகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான துணைக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த மைல்கல் திட்டத்திற்கான ஆரம்பக் கோவையை, அதன் ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புப் பிரிவு தயாரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வணிகம் மற்றும் மனித உரிமைகள் மீதான வழிகாட்டல் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த புதிய சட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது.

வணிக நிறுவனங்கள் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும், அவற்றின் செயல்பாடுகளால் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களைத் தடுத்து, அவற்றுக்கு உரிய தீர்வுகளைக் காண்பதற்கும் இந்த வழி காட்டல்கள் ஒரு நடைமுறை வழி காட்டியாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உத வியுடன், "இலங்கை மற்றும் மாலை தீவில் வணிகம் மற்றும் மனித உரிமை களை அங்கீகரிப்பதை ஊக்குவித்தல்" என்ற திட்டத்தின் கீழ் இதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்ப ட்டுள்ளன.

சர்வதேச அமைதி மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான மெக்ஸ் பிளாங்க் அறக்கட்டளை மற்றும் வளமான எதிர்காலத்துக்கான நிலையம் ஆகிய அமைப்புகள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

தனியார் துறை உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகளைத் தொடர்ந்து, இந்த வழிகாட்டல்கள் இறுதி செய்யப்பட்டன.

வெளியீட்டுக்கு முன்னர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வணிகம் மற்றும் மனித உரிமைகள் துணைக்குழு மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் துணைக்குழு ஆகியவற்றினால் இவை முழுமையான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதாக ஆணைக்குழுவின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media